பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 05, வெள்ளிக்கிழமை 19.05.2017 கதிர் 194

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

## ★ உண்மை கண்டறியப்பட்டு ★ நீதி நிலைநாட்டப்பட்டு ★ பரிகாரம் வழங்கப்பட்டால்தான்



# சமாதானம் சாத்தியம்!

## முள்ளிவாய்க்காலில் சம்பந்தன் உரை

முள்ளிவாய்க்கால், மே 18

**"இங்கு இடம்பெற்ற கொடூரங்கள் பற்றிய உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். அதனடிப்படையில் நீதி வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியின் அடிப்படையில் பரிகாரம் காணப்பட வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் ஒரு நிரந்தர சமாதானமும், அமைதித் தீர்வும் சாத்தியம்."**

**- முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நேற்று உரையாற்றுகையில் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் இவ்வாறு கூறினார்.**

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மே 18ஆம் திகதியான இன்று முள்ளிவாய்க்காலிலே மிகவும் முக்கியமான நிகழ்வு. 30வருட காலமாக நடைபெற்ற யுத்தம் இந்த பிரதேசத்தில்தான் நிறைவடைந்திருக்கின்றது.

அந்த யுத்தத்தில் மடிந்த மக்கள் அனைவரினதும் ஆத்மா சாந்தியடைவதற்காக அஞ்சலி

பக்கம் 18 »

## இனவழிப்பையே ஒற்றுமைக்கான வித்தாக்குவோம்!

### முள்ளிவாய்க்கால் சோக நிகழ்வில் முதல்வர் விக்னேஸ்வரன் அழைப்பு



யாழ்ப்பாணம், மே 18

**"எமது உறவுகள் அநியாயமாக இனவழிப்புச் செய்யப்பட்டமை இனத்தின் ஒற்றுமைக்கான வித்தாக அமைய வேண்டும்."**

**- இவ்வாறு கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாணமுதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் நிகழ்த்திய உரையின் முழு விவரம் வருமாறு :-

எமது வடமாகாண

பக்கம் 18 »




## முள்ளிவாய்க்காலில் உணர்வுபூர்வ அஞ்சலி

### சம்பந்தன் பேசும் போது சலசலப்பு, எதிர்ப்புக் குரல்

முள்ளிவாய்க்கால், மே 19

ஈழத் தமிழினத்தின் ஆன்மாவில் நீங்காத வடுவைஏற்படுத்தி, முள்ளிவாய்க்காலுடன் முற்றுப் பெற்ற கொடூர யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரம் தமிழ் உறவுகளுக்காய் நேற்று தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் ஒன்று கூடி உணர்வுபூர்வமாக அஞ்சலிசெலுத்தினர்.

முள்ளிவாய்க்காலின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் வடக்கு மாகாண சபையின் முன்னேற்பாட்டில் நேற்று முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

பக்கம் 03 »

## கேப்பாபிலவில் 70 ஏக்கரை விடுவிக்க இராணுவம் ரூ.40 கோடி கேட்கிறதாம்!

### போராட்டம் நடத்தும் மக்களிடம் சம்பந்தன் தகவல்



கொழும்பு, மே 18

கேப்பாபிலவு காணிகளில் 432 ஏக்கர் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், 70 ஏக்கர் காணியை விடுவிக்கப்படைதரப்பு 40 கோடிரூபா தேவை எனக் கோருகிறது என்றும் கூறினார்.

முல்லைத்தீவு, கேப்பாபிலவு பகுதியில் இரா

பக்கம் 03 »

## காணாமற் போனோர் விவகாரத்தை கண்டறிவதற்கு மஹிந்தவே தடை!

### முல்லைத் தீவில் சம்பந்தன் தெரிவிப்பு

முள்ளிவாய்க்கால், மே 19

போர்க் குற்ற விசாரணைக்கான கதவு காணாமற்போனவர்கள் தொடர்பானசட்டத்தின்மூலம்திறக்கப்படும் என்ற காரணத்தினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை நடைமுறைப் படுத்தத் தடையாக இருக்கிறார் என எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும், இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரத் தாம் ஆதரவுவழங்குவார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறி

பக்கம் 03 »

## நேற்றைய குழப்ப முயற்சிகளை கண்டிக்கின்றது கூட்டமைப்பு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நேற்று எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் குழப்பம் விளைவிக்கப்பட்டமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் அது அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.நேற்றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் சம்பந்தப்பட்ட செய்தியாளர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

பக்கம் 03 »

## வெள்ளவத்தையில் அடுக்குமாடி நிர்மாணம் திடீரென இடிந்து வீழ்ந்ததில் 27 பேர் படுகாயம்



கொழும்பு, மே 19

கொழும்பு, வெள்ளவத்தையில் திருமண மண்டபத்துக்கு அருகில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த ஐந்து மாடி அடுக்குக் கட்டடம் ஒன்று நேற்றுக்காலைகடும்மழைக்கு மத்தியில் திடீரெனச் சரிந்து வீழ்ந்ததில் திரு

பக்கம் 03 »

## நுணாவிலில் ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!



கொழும்பு, மே 18

சாவகச்சேரி -- நுணாவில் சந்தியில் நேற்று மாலை 3.30 மணியளவில் ஒரே சமயத்தில் 5 வாகனங்கள்மோதிவிபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி – நுணாவில் பொலிஸ்நிலையம் முன்பாகப் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸை உள் ஒழுங்கை ஒன்றில் இருந்து பிரதான வீதிக்கு வந்து ஏறிய இராணுவ பஸ் மோதியுள்ளது. இச்

பக்கம் 18 »

தமிழ்பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# நினைவேந்தலுக்கு நீதிமன்றத் தடை விதிக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது

## சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான வேலைத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா தெரிவிப்பு



கொழும்பு, மே 19

முள்ளிவாய்க்காலில் உள்ள தேவாலயம் ஒன்றில் நினைவேந்தலை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டமை கண்டனத்துக்கு உரியது என்று உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச வேலைத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதற்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு, சின்னப்பர் கத்தோலிக்க இல்லத்தக்கு அண்மையில் செய்யவிருந்த நிகழ்வொன்றுக்கு 14 நாள்களுக்கு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

இந்த நிலையில், இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான வேலைத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா மேற்கண்ட விடயத்தை தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி இந்த தடை ஏற்படுத்தப்பட்டமை கண்டனத்துக்கு உரியது. யுத்தத்தில் இறந்த தங்களின் உறவினர்களை நினைவு கூருவது பொது மக்களுக்கு உள்ள அடிப்படை உரிமை யாகும்.

நீதிமன்றத்தின் ஊடாக இந்தத் தடை பெற்றுக்கொள்ளப்பட்டமை மக்களின் அடிப்படை உரிமை மீறலாகவே கருதப்படுகிறது. இது தமிழ் மக்கள் இன்னும் இராணுவ மயமாக்கலிலும், அரசின் கெடுபிடியிலுமே வாழ நேர்ந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது என்று யஸ்மின் சூகா மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## அரச சொத்துகள் விற்கப்படவில்லை

தற்போதைய அரசு எந்த விதமான அரசசொத்துக்களையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய வில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவே 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிதியமைச்சர் என்ற ரீதியில் இராணுவத் தலைமையத்தை விற்பனை செய்தார்.

இவ்வாறு கடந்த அரசால் விற்பனைசெய்யப்பட்டவற்றை குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

அவ்வாறு தற்போதை அரசால் விற்பனை செய்யபடுகிறது என்று கூறப்படுவதைகுறிப்பிட்டுக் காட்ட முடியுமா? எனவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பினார். (ஐ)



## வவுனியாவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணனின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றுள்ளது.

வவுனியா செட்டிகுளம் கந்தசாமி நகர் பிரிவில் உள்ள கல்லாறு பகுதியில் இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் உயிரிழந்த உறவுகளுக்கு ஆத்மா சாந்தி பிரார்த்தனை இடம்பெற்றது. இந்த படுகொலையில் உயிர் நீத்த உறவுகளுக்காக விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர். (ஐ)

## அடம்பன் நெடுங்கண்டலில் உணர்வு பூர்வமாக அஞ்சலி!



மன்னார், மே 19

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைகளின் எட்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அடம்பன் நெடுங்கண்டல் பிரதேசத்தில் மிகவும் உணர்வோடு நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் அடம்பன் பங்குத்தந்தை, மெதடிஸ்த திருச்சபையின் போதகர், இந்துக்குருக்கள், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபையின் உறுப் பினர்களான வைத்தியக் கலாநிதி ஞா.குணசீலன், ஏ.எஸ். பிரிமூஸ் சிறைவா ஆகியோரும், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு வினர், தமது உறவுகளை யுத்தத்தில் இழந்த உறவினர்கள், அந்தப் பகுதியைச் சேர்ந்த மூத்த பிரஜைகள், மன்னார் நகர ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஈகைச்சுடரை கடந்த யுத்தத்தில் தனது ஐந்து பிள்ளைகளையும் இழந்த தாயார் ஏற்றிவைத்தார். நிகழ்வு களை மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையேற்று நடத்தினார். (ஐ)

## இளங்கலைஞர் மன்றத்தின் 38 ஆவது இசை விழா

இளங்கலைஞர் மன்றம் வழங்கும் 38 ஆவது இசை விழா இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று நாள்களுக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 5 மணிக்கு ச.லலீசன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் கலந்து கொள்வார்.

மங்கல இசையில் நாதஸ்வரம் - ம.கோபிராஜ், இ.சம்புதன், தவில் - ஸ்ரீ சிந்துஜன், ஸ்ரீ பங்கஜன்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து இளங்கலைஞர் மன்ற மாணவர்களின் குழுப்பாடல் இடம்பெறும். வயலின்- எஸ்.கனோஜா, மிருதங்கம்- க.குகதாஸன்.

தொடர்ந்து புல்லாங்குழல் இசை இடம்பெறும். புல்லாங்குழல்- க.தேசிகன், வயலின்- ப.சியாம்கிருஷ்ண, மிருதங்கம்- எம்.பிரணவன், கெஞ்சிரா- கே.ஞானவேல்.

தொடர்ந்து இடம்பெறும் இசைய ரங்கத்தில் பாட்டு- ஏ.கே.கருணாகரன், வயலின்- கே.குகபரன், மிருதங்கம் கே.கஜன், முகர்சிங்- எஸ்.செந்தூரன்.

முதன்மை விருந்தினர் உரையை அடுத்து க.ரிசிவர்மனின் நெறியாள்கையில் 'சீத்தா சுயம்பரம்' நாட்டிய நாடகம் இடம்பெறும்.

இதனையடுத்து சிறுப்பிட்டியூர் வில்லிசைக் கலைமாமணி சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினர் வழங்கும் 'திருநீல கண்டர் சரிதம்' வில்லிசை இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வுகளும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மூன்றாம் நாள் நிகழ்வுகளும் இடம்பெறும். (ஐ)



## புதுக்குடியிருப்பு நகரில் சுடரேற்றி அஞ்சலி

முல்லைத்தீவு, மே 19

கடந்த 2009 ஆம் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் காவு கொள்ளப்பட்ட பல்லாயிரக் கணக்கான உறவுகளை நினைந்து நினைவேந்தல் நேற்று புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு நகரில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பில் அனைத்து கடைகளும் பூட்டப்பட்டு நகரில் ஈகைசுடரேற்றி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-81)

# முள்ளிவாய்க்கால் பேரவலம்; கருத்துக் கூற ரஜினி மறுப்பு!

சென்னை, மே 19

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவுதினம் பற்றிய கேள்விக்கு பதில் அளிக்க நடிகர் ரஜினிகாந்த் மறுப்பு தெரிவித்துள்ளார். இது தமிழர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை இராணுவத்தின் கொடிய ஆட்டத்தின் உச்சகட்டமான மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தினமாக உலகத் தமிழர்களால் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் புதிதாக கட்சி தொடங்கப்போவதற்கான முஸ்தீபு பணிகளில் ஈடுபட்டுள்ள நடிகர் ரஜினிகாந்திடம் முள்ளிவாய்க்கால் தினம் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு ரஜினி பதில் அளிக்க மறுத்துவிட்டார்.

• ரஜினியின் செயல் ஈழத் தமிழர்கள் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தை கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ளது.

இதற்கு சுட பதில் சொல்ல முடியாதவர் அரசியலுக்கு வந்து என்ன செய்யப்போகிறார் என்று தமிழர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ரஜினியின் இந்த செயலுக்கு தமிழ் ஆர்வலர்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

## கால்வாய்க்குள் பாய்ந்த கார்!

கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் பாய்ந்ததில் ஏழு பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் மாத்தறைக்கு அண்மையில் கம்புருபிடிய பலொல்பிடிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

திருமண வீடு ஒன்றில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோரே இந்த அனர்த்தத்தில் சிக்கினர். வேகக் கட்டுப்பாட்டை இழந்து கார் கால்வாய்க்குள் பாய்ந்தது. காயமுற்றோர் மாத்தறைப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ)

## தலைநகர் கொழும்பில் காற்றுடன் கடும் மழை போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்பு, மே 19

கொழும்பில் காற்றுடன் பெய்யும் கடும் மழையால் வீதிகளில் மரங்கள் முறிந்துவீழ்ந்து போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு லோட்டஸ் வீதி, ரெலிகொம் மத்திய நிலையத்துக்கு அருகில், மருதானை டாலி வீதியில் தீயணைப்புப் பிரிவுக்கு அருகில், புறக்கோட்டை டிரக்டர் கூட்டுத்தாபன சந்தி போன்ற பகுதிகளிலேயே மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

இதேசமயம் உடஹமுல்ல மற்றும் பெங்கிரிவத்த, நுகேகொட பகுதிக்கு அருகில் மரம் ஒன்று முறிந்து ரயில் தண்டவாளத்துக்குக் குறுக்கே வீழ்ந்ததால் களனிவெளி ரயில் சேவையும் பாதிப்படைந்தது. (உ)

## வெள்ளவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண மண்டபமும் பாதிப்படைந்தது. இதில் சிக்குண்டு 27 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் பத்துப் பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தது.

காயப்பட்டோர் கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் களுபோவில வைத்தியசாலை ஆகியவற்றுக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

கடும் மழைக்கு மத்தியில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டோரை மீட்கும் பணி துரிதமாக முன்னெடுக்கப்பட்டது. கட்டட இடிபாடுகளுக்குள் இன்னும் ஓரிருவர் உயிருடன் சிக்கிக் கொண்டிருக்கலாம் என்று நேற்று மாலையில் தெரிவிக்கப்பட்டது. நேற்றிரவு உயிருடன் மீட்கப்பட்ட ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மீட்புப் பணிகளில் 110 அதிகாரிகள் மற்றும் படையினர் ஈடுபட்டுள்ளனர். நேற்று இரவிரவாக மீட்புப் பணி நடைபெறுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளவத்தை, 'சவோய்' திரையரங்கிற்கு அருகில் 'எக்ஸலன்ஸி' திருமண மண்டபத்துக்குப் பின்புறத்தில் நிர்மாணிப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கட்டடம் தொடர்ந்து சாய்ந்து வருகின்ற நிலையில், பாதுகாப்புக் கருதி அக்கட்டடத்தை அண்மித்த பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

விடயம் அறிந்ததும் தீயணைப்புப் படை வீரர்கள், இராணுவத்தினர் ஆகியோர் விரைந்து சென்று மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர்.

மேற்படி திருமண மண்டபத்தின் வாகனம் நிறுத்தும் பகுதியிலேயே இடிந்து விழுந்துள்ளது. இதில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல வாகனங்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன எனவும் கூறப்படுகிறது.

இந்தக் களேபரத்தினால் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிப் பகுதிகளில் காலி வீதியூடான போக்குவரத்து நீண்ட நேரம் பாதிக்கப்பட்டது. துரித மீட்பு நடவடிக்கைகளுக்காக அப்பகுதிப் போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. (உ)

## 'சமுர்த்தி புகழாரம்' நிகழ்வு நாளை

மாவட்ட மட்டத்தில் வங்கித் தரப்படுத்தலில் சிறந்த அடைவு மட்டத்தைப் பெற்ற சமுர்த்தி வங்கிகள் மற்றும் சேமிப்பு, கடன் வழங்கல் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் 'சமுர்த்தி புகழாரம் - 2017' எனும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாகச் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நீல் பண்டார ஹப்புகின்னவும், சிறப்பு அதிதியாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பணிப்பாளர் கே.கே.எல்.சந்திர திலக்கவும் கலந்து கொள்கின்றனர். (உ)

## பந்தல் சரிந்ததில் 4 வாகனங்கள் சேதம்!

கொழும்பு, மே 19

கொழும்பில் தொடர்ந்து காற்றுடன் கடும் மழை பெய்து வருகையில், கிரிபத்கொடப் பகுதியில் வெசாக்கிற்கு அமைக்கப்பட்ட பாரிய தோரணப் பந்தல் நேற்றுத் திடீரெனச் சரிந்து வீழ்ந்ததில் நான்கு வாகனங்கள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (உ)

## ஆறரைக் கிலோ தங்கச் சங்கிலிகள் மீட்பாம்!

விமான நிலையப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த ஒரு தகவலின் அடிப்படையில், மலேசியாவிலிருந்து சட்டவிரோதமாக எடுத்து வரப்பட்டவை எனக் கருதப்படும் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான - ஆறரைக் கிலோ கிராம் எடையுள்ள - தங்கச் சங்கிலிகளுடன் விமான பணிக் குழுவின் உறுப்பினர் ஒருவரைக் கட்டுநாயக்கா விமான நிலையச் சுங்க அதிகாரிகள் கைது செய்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## மட்டு. விபத்தில் தலை நசுங்கிப் பலி!

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில்போரதீவு பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களைப் பின்னால் வந்த கனரக வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் வாகனத்தில் சிக்குண்டு தலை நசுங்கிப் பலியானார். அவருடன் கூடச் சென்றவர் படுகாயமடைந்தார்.

கொல்லன் தொழில் செய்யும் பிள்ளையான்தம்பி கிருஷ்ண பிள்ளை (மூத்தவன்) என்பவரே தலை நசுங்கிப் பலியானார். மட்பாண்டத் தொழில் செய்யும் புண்ணியமூர்த்தி என்பவர் படுகாயமுற்றார். வாகனத்தின் சாரதி களுவாஞ்சிக்குடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (உ)

## கேப்பாபிலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவம் வசமுள்ள தமது காணியை விடுவிக்குமாறு கோரி 80ஆவது நாளாகத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்று மதியம் அந்த மக்களைச் சந்தித்தார். அவர்களின் கோரிக்கையின் பேரில் இராணுவ முகாமுக்குள் சென்று இராணுவத்தினருடன் பேச்சுக்களில் ஈடுபட்ட பின்னர், மீண்டும் சம்பந்தப்பட்ட மக்களைச் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

காணி விடுவிப்புக்கான உங்கள் போராட்டம் தொடர்பில் நாம் இராணுவத்தினருடன் பேசியிருக்கின்றோம். இதற்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புத் தரப்பினருடனும் பேசியிருந்தோம்.

இராணுவம் கூறுவதைப் பார்க்கின்றபோது 243 ஏக்கர் காணியை உடனடியாக அவர்கள் விடுவிப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் 189 ஏக்கர் காணியை விடுவிப்பதாகக் கூறுகிறார்.

இவ்வாறாக, 432 ஏக்கர் காணி தவிர, 111 ஏக்கர் காணியை ஆறு மாத காலத்திற்குள் விடுவிப்பார்கள் எனத் தெரிவிக்கின்றனர். இதனை விடுவிக்க 10 கோடி ரூபா நிதி தேவை எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். இந்தக் காணியைப் பேசி விரைவாக விடுவிக்கச் செய்ய முடியும் எனக் கருதுகின்றேன்.

அத்துடன், மக்களின் வீடுகள், ஆலயங்கள் அமைந்திருந்த 70 ஏக்கர் 2ஆம் காணியை விடுவிக்க இராணுவம் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. அதனை விடுவிப்பதாக இருந்தால் தமக்கு 40 கோடி ரூபா நிதி தேவை என இராணுவம் கூறுகிறது.

இந்த அடிப்படையில் நாம் இராணுவ முகாமுக்குள் சென்று காணிகளைப் பார்வையிட்டிருக்கின்றோம். இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதி, பிரதமருடன் பேசி விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேவையேற்படின் மீண்டும் கேப்பாபிலவு காணிகளை நாம் பார்வையிட வருவோம். -எனவும் தெரிவித்தார்.

இரா. சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, வைத்தியர் சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (உ)

## முள்ளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 9.30 மணிக்கு ஈகச் சுடரேற்றி அகவணக்கம் செலுத்துதலுடன் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரான மாவை. சேனாதிராசா எம்.பி. மற்றும் எம்.பிக்களான எஸ்.சிறிதரன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வைத்தியர் சிவமோகன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடக்கு மாகாண சபைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், மாகாண அமைச்சர்கள் பா.சத்தியலிங்கம், பொ.ஐங்கரநேசன், மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் பெரும் எண்ணிக்கையான வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பல நூற்றுக் கணக்கில் பொதுமக்கள் இந்த நிகழ்வில் உணர்வுபூர்வமாகப் பங்குபற்றினர்.

முதலில் ஈகச் சுடரேற்றிய பின்னர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து சுடர் ஏற்றிய பின்னர் சம்பந்தன் உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டது.

அவரது உரை தொடர்ந்துகொண்டிருந்தபோது, முன்னால் அருகில் இருந்த செய்தியாளர் ஒருவர் குறுக்கிட்டு உரத்த குரலில் "ஐயா! பயங்கரவாதத்தை ஒழித்தமைக்காக மஹிந்த ராஜபக்ஷவையும், கோட்டாபய ராஜபக்ஷவையும் நாடாளுமன்றத்தில் பாராட்டிவிட்டு இங்கு வந்து நீங்கள் இப்படிப் பேசுகின்றமை முரண் இல்லையா?" - என்று கேட்டார்.

அதற்கு சம்பந்தன் பதிலளித்தார்.

"நான் நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு சொல்லையும் அளந்து பேசுகின்றவன். என் பேச்சுக்கள் அனைத்தும் எனக்கு நினைவில் உள்ளன. நான் அப்படிப் பேசவில்லை. முதலில் எனது பேச்சை நாடாளுமன்றப் பதிவுகளில் படித்துவிட்டு வந்து கூறுங்கள்." - என்று சொல்லிவிட்டுத் தனது பேச்சை அவர் தொடர்ந்தார்.

அதேசமயம், மேற்படி செய்தியாளருக்கு எதிராக வேறு சிலர் கருத்துக் கூற முற்பட, செய்தியாளருக்கு ஆதரவாக மற்றும் சிலர் சத்தமிட சற்றுக் களேபரமாயிற்று. உரத்த குரலில் பலரும் சத்தமிட்டுப் பேசத் தொடங்கினர். சம்பந்தனுக்கு எதிராகவும் பல குரல்கள் ஒலித்தன.

எனினும், அவற்றையும் மீறி சம்பந்தன் தொடர்ந்து பேசிய பின்னர் தமது உரையை முடித்துக் கொண்டார்.

சம்பந்தன் பேசிய சமயம் குழப்பம் ஏற்பட்டமையால், அவரது பேச்சுடன் அந்த நிகழ்வு முற்றுப் பெற்ற போதிலும், அங்கு சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

இளம் பெண் ஒருவர் சம்பந்தனுக்கு எதிராகக் காரசாரமாகச் சத்தமிட்டுக் கேள்விகளை எழுப்பினார். (உ)

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பெயர் நீக்கப்பட்ட நிலையில் அறிக்கையின் விவரம் வருமாறு:-

இன்று (நேற்று) காலையில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது ஒரு புனிதமான நிகழ்வு. மக்களின் உணர்வுபூர்வமான, கண்ணீர் கலந்த சோக நிகழ்வு. மக்களின் நெஞ்சைத்தொட்ட அஞ்சலி வைபவம்.

அதைக் கௌரவப்படுத்தி, அந்த நிகழ்வைத் திட்டமிட்டுக் குழப்பி, அதை அலங்கோலப்படுத்திய நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இதை ஆரம்பித்துவைத்தவர் வடக்கு மாகாண சபையின் நிதி அமைச்சில் வேலை செய்கின்ற ஓர் ஊழியர். தன்னை ஊடகவியலாளர் என அறிமுகப்படுத்தி வந்தவர்.

இவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவரின் வாகனத்தில்தான் இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார். அந்த வாகனத்தில் தான் திரும்பியும் போயிருந்தார்.

இது நமது மக்களின் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்த ஒரு சோகமான - புனிதமான - மரியாதைக்குரிய நிகழ்வு. இந்த நிகழ்வைத் தமது நடவடிக்கை மூலம் களங்கப்படுத்தியமையோடு தொடர்பில்லாத அரசியல் பிரச்சினைகளையும் அங்கு எழுப்பிய தன் மூலம் தங்களுடைய சொந்த அரசியல் நலனுக்காக அவர்கள் முன்னெடுத்த ஒரு செயலாகவே இது எமக்குத் தென்படுகின்றது.

அத்தோடு நாடாளுமன்றத்தில் சம்பந்தன் பேசியிராத ஒரு விடயத்தை அவர் பேசினார் என்று பொய்யான அடிப்படையில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

இது ஒரு விஷமத்தனமான - தங்களின் சுய அரசியல் நலனுக்காக அவர்களால் முன்னெடுக்கப்பட்ட - கீழ்த்தரமான நடவடிக்கையன்றி வேறில்லை.

ஒரு முக்கியமான - நமது மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட - ஓர் அஞ்சலி நிகழ்வை களங்கப்படுத்தியமையைக் கண்டிக்கிறோம் - என்று உள்ளது. (உ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேன தமக்கு உறுதியளித்துள்ளார் எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை இரா. சம்பந்தன் நேற்று நேரடியாகச் சந்தித்தார். அப்போதே அவர் இவ்வாறு கூறினார்.

முள்ளிவாக்காலில் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து அவர்களின் துன்பங்களை அவர் நேரடியாகக் கேட்டறிந்தார். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மீண்டும் அரசில் வேதாளம்!

**இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நீண்ட காலம் இழுபடுவதற்குக் காரணம், ஆட்சிப் பீடத்தைக் கட்டியாளும் பேரினவாதமே என்பது வெளிப்படை; வெள்ளிடைமலை.**

பெரும்பான்மைத் தரப்பினரிடையே ஆட்சி லாகனை யார் கையில் பிடித்து வைத்திருப்பது என்ற போட்டியில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஒரே ஆயுதம் இந்த இனவாதம்தான். அதுவே இந்த நாட்டின் கடந்த எழுபது ஆண்டு கால சரித்திரமும் கூட.

பெரும்பான்மை இனத்தின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து 'நல்லாட்சி அரசு' என்ற பெயரில் ஆட்சிக் கூட்டமைப்பை அமைத்த போது, இந்தப் போக்கில் மாற்றம் வரும் என்று தான் பலரும் நம்பினார்கள்.

காலம் காலமாக இந்தத் தீவில் கோலோச்சிய பேரினவாத மேலாதிக்கத்துக்கு ஒரு முடிவு கட்டப்படும் என்றே அந்த அடக்கு முறைகளினால் பாதிக்கப்பட்டு வந்த தமிழர் தலைமைகளில் இருந்து, இந்த விடயத்தில் பட்டும் படாமலும் செயற்பட்டு வந்த பார்வையாளர்களான சர்வதேசம் வரை நம்பின.

ஆனால் நிலைமை அப்படியல்ல, பேரினவாதமே என்றும் மேலோங்கி நிற்கும் என்பது, இப்போது பெரும்பாலும் ருசுவாகி வருகின்றது.

சுமார் ஒரு தசாப்த காலம் தமிழர்கள் மீது கொடூரப் போரைத் தொடர்ந்து, தமிழர் தாயகத்தின் ஆன்மா மீது நீங்காத பெருங் காயத்தை ஏற்படுத்திய மஹிந்த ராஜபக்ஷ அரசு, அரசியல் தந்திரோபாய நகர்வுகள் மூலம் வீழ்த்தப்பட்டமையை அடுத்து, சற்று அடங்கிப் போய்க் கிடந்த பேரினவாத மேலாதிக்கம், மீண்டும் பெருக்கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதற்கு மீண்டும் அரங்கேற்றத் தொடங்கியிருக்கும் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் வண.கலகொட அத்த ஞானசாரதேரரின் இனவாத ஆட்டம் நிரூபணமாகும்.

'நல்லாட்சி' அரசின் வரவின் ஆரம்ப காலத்தில் பழைய துடிப்போடு பேரினவாத அட்டகாசம் புரிந்த அவர், பின்னர் ஆட்சித் தரப்பால் 'வழங்கப்பட்ட' சில 'உபதேசங்களை' அடுத்து சற்றுக் காலம் அடங்கிப் போயிருந்தார் என்பது தெரிந்ததுதான்.

ஆனால், வேதாளம் இப்போது மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது.

சிறுபான்மை இனத்தவர்கள் அல்லது மதத்தவர்களைக் குறிவைத்துப் 'பேய்க் கூத்தாடும்' பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் குறியீடாகத் தம்மைக் காட்டிக்கொள்வதற்காகப் பெரும் அட்டகாசங்களை இப்போது அடிக்கடி மேடையேற்றி வருகின்றார் அவர்.

தமிழர்களுக்கு எதிராக, முஸ்லிம்களுக்கு எதிராக, கிறிஸ்தவர்களுக்கு எதிராக என்று தினசரி பெரும் சர்ச்சைக்குரிய - கீழ்த்தரமான - மிக மோசமான - கருத்துக்களைப் பகிரங்கமாக விடுவதன் மூலம், பௌத்த, சிங்கள மக்கள் மத்தியில் தன்னை பெரும் 'கதாநாயகனாக' காட்டி உயர்த்திக் கொள்ள முயல்கிறார் அவர்.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சுக்குள் தனது ஆதரவாளர்களுடன் புகுந்து அவர் பண்ணிய ரகளையில், ஏற்கனவே தாம் ரத்துச் செய்துவிட்டதாக அறிவித்த சந்திப்புக்காக மீண்டும் அமைச்சுக்கு ஓடி வரவேண்டியவரானார் தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோ கணேசன்.

தேசிய சகவாழ்வுக்கு எதிராக பௌத்த, சிங்கள பேரினவாதத்தைப் பிரயோகித்து பொது இடங்களிலும், பொது மேடைகளிலும் அட்டகாசம் புரிந்து வந்த வண.ஞானசாரதேரர், இப்போது தேசிய சகவாழ்வு அமைச்சுக்குள்ளேயே புகுந்து, அமைச்சருக்கு சரிசமமாக அமர்ந்துகொண்டு, பெருங்குரலில், மேலாதிக்க மமதையோடு, "தமிழரான நீ எப்படி இந்த அமைச்சில் இருக்க முடியும்?" என்று நுளரிச்சலாகக் கேட்கும் அளவுக்கும் - அதை அரசும், அமைச்சர்களும் பார்த்திருக்கும் அவலத்துக்கும் - நிலைமை சென்றிருக்கின்றது.

இதே அவல நிலைமைதான் முஸ்லிம்களுக்கும். வண.ஞானசார தேரரின் அட்டகாசம் குறித்து தினசரி ஒரு முஸ்லிம் தலைவர் பெருங்குரல் எடுத்து 'ஒப்பாரி' வைக்கும் கருத்துத்தான் இப்போதெல்லாம் பத்திரிகைகளில் வெளியாகின்றது.

அரசுத் தரப்பிலும், கூட்டு எதிரணித் தரப்பிலும் அவற்றுக்கு முண்டு கொடுத்து, அதன் மூலம் சுயலாப அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிக்கும், வண.ஞானசார தேரர் போன்றோரின் பேரினவாத அட்டகாசங்களுக்கும் எதிராக எதுவும் செய்ய முடியாத நிலை - வெறும் பத்திரிகை அறிக்கைகளை விடுவதைத் தவிர.

இவ்வாறு வண.ஞானசார தேரர் வடிவத்தில் பேரினவாதம் இந்தச் சமயத்தில் பீறிட்டுக் கிளம்புவதின் பின்னணியில் சில காரணங்கள் உள்ளன என்பதையும் நாம் மறுத்துவிட முடியாது.

சிறுபான்மை மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டிய கட்டாயத்துக்குள் சிக்கியிருக்கும் 'நல்லாட்சி' அரசினருக்கு, அப்படி வழங்கி, பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் "வரலாற்றுப் பழி"யைத் தாங்கள் சுமக்காமல் தப்புவதற்கு ஒரு காரணி தேவைப்படுகின்றது.

அதேமாதிரி, ஆட்சித் தரப்பை வீழ்த்தி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் துடியாய்த் துடித்துக் கொண்டு காத்திருக்கும் கூட்டு எதிரணிக்கும் ஆட்சியை வீழ்த்த ஒரு துரும்பு அவசியப்படுகின்றது.

இரண்டு தரப்புக்கும் வகையான ஆயுதமாகச் சிக்கியிருப்பது பேரினவாத எழுச்சியே.

பிறகென்ன? இரண்டு தரப்புகளினதும் ஆசியோடு மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது அது. அந்தச் செயற்பாட்டின் குறியீட்டுமையம் வண.ஞானசார தேரர். அவ்வளவுதான்!

# நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை வாக்காளர் பட்டியல் குறைநிரப்பு

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மே 19

வாக்காளர் இடாப்புக்கு, நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை குறைநிரப்பு பட்டியலைச் சமர்ப்பிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

18 வயதைப் பூர்த்தி செய்கின்ற இளைஞர், யுவதிகள் ஆகியோருக்கு எவ்விதமான இடையூறுகளுமின்றி வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதே அதன் நோக்கம் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது அமுலில் இருக்கும் முறைமையின் கீழ், வாக்காளர் இடாப்பில், ஒரு வருடத்துக்கு ஒருதடவையே பெயர்கள் உள்வாங்கப்படுகின்றன. ஆகையால், 18 வயது முழுமையாகப் பூர்த்தியடைந்ததும், வாக்காளர் இடாப்பில் தங்களுடைய பெயர்களை உள்ளடக்க முடியாத நிலைமை சிலருக்கு ஏற்படுகின்றது.

இந்தநிலையில், புதிய வேலைத்திட்டத்தின் கீழான சட்ட வரைவுகள் அரசியல் கட்சிபிரதிநிதிகளிடம்கையளிக்கப்பட்டுள்ளன. அதற்கு, அந்தப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதனடிப்படையில், அந்த சட்ட வரைவுகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.- என்றுள்ளது. (எ)

# முத்துச் சிப்பித் தொழில் வளர்ப்பை மீண்டும் பிரபலப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, மே 19

இலங்கையில் கடலை அண்டிய பகுதிகளில் பிரபலமான தொழிலாக இருந்து வந்த முத்துச் சிப்பி வளர்ப்பு, தொழிலை மீண்டும் பிரபலப்படுத்த 'நாரா' அமைப்பு திட்டமிட்டுள்ளது.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவின் ஆலோசனைக்கு அமைய இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தம் மற்றும் போர்ச் சூழல் காரணமாக வீழ்ச்சியடைந்த இந்தத் தொழில் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

நன்னீர் மற்றும் கடலில் மேற்கொள்ளப்படும் இந்த முத்து சிப்பி வளர்ப்புக்கு புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

சிலாபத்தில் இருந்து சிலாபத்துறை வரையான கடல் முத்து சிப்பி வளர்ப்புக்கு ஏற்ற சூழ்நிலையைக் கொண்டது என்றபோதிலும் நாட்டில் ஏனைய இடங்களிலும் இவற்றை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மீனவர்கள் மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முத்துச் சிப்பி வளர்ப்பை வெற்றிகரமான முறையில் மேற்கொண்டால், இலங்கை பெருமளவில் அந்நிய செலாவணியை ஈட்ட முடியும் என்று பொருளதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலகில்தற்போதுமுன்னணி முத்துச் சிப்பி வளர்ப்பில் ஈடுபட்டு வரும் பாகிஸ்தான் வருடாந்தம் 600 கோடி ரூபாவை வருமானமாகப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலகில் இளம் வயதினர் அதிகமாக வீதி விபத்துக்களால் உயிரிழப்பு!

## உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

World Health Organization

உலகில் 10-19 வயதுடைய இளம் வயதினரின் உயிரிழப்புக்கு முக்கிய காரணமாக இருப்பது வீதி விபத்துக்களே என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தினமும் 3 ஆயிரம்பேர் என்ற வகையில், ஆண்டுக்கு 12 லட்சம் பேர் வீதி விபத்துக்களால் தங்கள் உயிரை இழக்கின்றனர் என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 2015 இல் ஏற்பட்ட உயிரிழப்புகளில் வீதி விபத்துக்கள், சுவாச நோய்த் தொற்றுகள், தற்கொலை ஆகியவை முக்கிய காரணங்களாக உள்ளன.

2015 ஆம் ஆண்டு 10-19 வயதினர் பிரிவில் வீதி விபத்தால் ஏற்பட்ட காயங்கள் மூலம் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 302 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுவாசத் தொற்றுப் பிரச்சினையால் 72 ஆயிரத்து 655 பேரும், தற்கொலையால் 67 ஆயிரத்து 149 பேரும், வயிறு தொடர்பான உபாதைகளால் 63 ஆயிரத்து 575 பேரும் தண்ணீரில் மூழ்கி 57ஆயிரத்து 125 பேரும் உயிரிழந்துள்ளனர்.

வீதி விபத்துக்களில் பாதசாரிகள், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களே அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும், மூன்றில் இரண்டு பங்குக்கும் மேலான விபத்துக்கள், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளான ஆபிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்டுள்ளன.

எச்.ஐ.வி. எய்ட்ஸ், மூளைக் காய்ச்சல், சுவாசக் கோளாறு உள்ளிட்ட நோய்த் தொற்று காரணமாகவே பெரும்பாலான இளம் வயதினர் ஆபிரிக்க நாடுகளில் உயிரிழந்துள்ளனர்.

19 வயதுடைய பெண்கள் பலர் மகப்பேறு சிக்கல்களால் தங்கள் உயிரை இழந்துள்ளனர்.- என்றுள்ளது. (எ)

நீர் வெறுப்பு நோயிலிருந்து எம்மை பாதுகாப்போம்!

கடித்த விலங்கு தெருநாயாகவோ அன்றி 14 நாள்கள் அவதானிக்க முடியாததாகவோ இருக்குமாயின் உடனடியாக விசர்நோய் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுதல் வேண்டும்.



விசர் நோய் பற்றி அறிந்து கொள்வோம். அவதானமாக இருப்போம்!

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

20.05.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : பூரம் காலை - 7.01 வரை
திதி : நவமி பி.ப 1.04 வரை

சுபநேரம் : 2.52 - 4.22 வரை
இராகு காலம் : 8.52 - 10.22 வரை

காலைக்கதிர்



# அரசு மாறட்டும்; அமைச்சரவை அல்ல!

## இந்திக அனுருத்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 19

நாட்டில் தற்போது உருவாகியுள்ள அரசியல் நிலைமையில், தேவைப்படுவது அமைச்சரவை மாற்றம் அல்ல அரச மாற்றம் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இன்றைய நாள் (நேற்று) வெற்றிகரமாக கொண்டாட வேண்டிய நாள். கடந்த காலத்தில் மனிதாபிமான நடவடிக்கை மூலம் வடக்கு மக்களுக்கு பிரதிபலன் கிடைத்தது. எனினும் தற்போதைய அரசு அனைத்தையும் இரத்துச் செய்துள்ளது.


மஹிந்த ராஜபக்ஷ கடந்த காலத்தில் படையினருடன் இணைந்து மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால், தற்போதைய அரசு பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# கிளிநொச்சியில் 27 பாடசாலைகளை புனரமைக்க 250 மில்லியன் ரூபா!

## வழங்கவுள்ளது இந்திய அரசு





கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சியில் 27 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு 25கோடி ரூபாவை இந்தியா வழங்கவுள்ளது என்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இந்தியத்துணைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் அதிகளவான பாடசாலைகள் யுத்தத்தின் பின்னர் பெரும் வளப்பற்றாக் குறைகளுடன் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில், அங்கு சென்ற இந்தியத்துணைத் தூதுவர் நடராஜன் புனித பெண்கள் திரேசா கல்லூரி, உருத்திரபுரம் மகாவித்தியாலயம், சிவபாத கலையகம் அன்னை சாரதா வித்தியாலயம் முரசுமோட்டை அந்தோனியார் வித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளுக்குச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் அந்தப் பாடசாலை நூலகங்களுக்கு ஒரு தொகைநூல்களையும் வழங்கி வைத்துள்ளார்.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்த சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் மூலம் அரசமைப்பை மீறுவதாகச் சட்டமா அதிபரால் சுட்டிக்காட்டப்பட்டமையை அடுத்து, அதில் திருத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிலையில், இந்தச் சட்ட மூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் அங்கீகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபாவால் முன்வைக்கப்பட்ட இது தொடர்பானயோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்தயோசனையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:- முன்மொழியப்பட்டுள்ளஉள்ளூராட்சிநிறுவனங்களின் தேர்தல் நடத்தும் கட்டளைச்சட்டம் (262ஆவது அதிகாரம்) திருத்தசட்டமூலம் அமைச்சரவை உப குழுவின் மூலம்மேலும்ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன்,தேர்தல்ஆணைக் குழுவின்மூலம் முன்வைக்கப்பட்டுள்ள அம்சங்களும் கவனத்தில் கொள்ளப் ட்டு இறுதிச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தின் சில பிரிவுகள் அரசமைப்பின் 75 ஆம் பிரிவை மீறும் அம்சங்களாகக் காணப்படுகின்றமையால், அதனை நாடாளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையின் மூலம் அங்கீகரிக்க வேண்டும் என சட்டமா அதிபரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பின்னர் இந்த அம்சங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து, நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், பின்னர் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் தேர்தல் ஆணைக் குழுவால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மேலதிக திருத்தங்கள் நாடாளுமன்ற குழு நிலை விவாதங்களின்போதுஇணைத்துக் கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த!

கொழும்பு, மே 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்று அவர் விரைவில் இந்தியா செல்லவுள்ளார் என்று தெரிய வருகின்றது.

ஐக்கிய நாடுகள் வெசாக் தின நிகழ்வில் பங்கேற்பதற்காக கடந்தவாரம் இலங்கை வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்திருந்தார்.

இதன்போது மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் அழைப்பு விடுக் கப்பட்டது என்று கூறப்பட்டது.

இந்த நிலையிலேயே, மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# தரை, வான் வழியாக அம்புலன்ஸ் சேவை நாடளாவிய ரீதியில் நடத்த ஜேர்மன் உதவி



நாடளாவிய ரீதியில் தரை வழியாகவும், வான் வழியாகவும் அம்புலன்ஸ் சேவைகளை அமுல்படுத்த ஜேர்மன் உதவ முன்வந்துள்ளது.

ஜேர்மனின் பென்ஸ் நிறுவனமும், ஏயார் பஸ் நிறுவனமும் இதற்கான முதலீடுகளை மேற்கொள்ள இருக் கின்றன. இலவசமான முறையில் இது அமுல்படுத்தப்படவிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் சென்றுள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஜேர்மனின் பொருளாதார நிதித்துறை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகளைத் தொடர்ந்து இதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்கள், அவசர விபத்துக்கள் என்பனவற்றின்போது, நோயாளர்களை ஏற்றிச் செல்ல ஜேர்மனின் ஏயார் பஸ் நிறுவனத்தால் 24 ஹெலிகொப்டர்கள் வழங்கப்படவுள்ளன.அத்துடன் ஆயிரத்து 50 அம்புலன்ஸ்களும், 240 அனர்த்த வாகனங்களும் வழங்கப்பட இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# சரத் பொன்சேகாவின் எம்.பி. பதவிக்கு எதிரான வழக்கு விசாரணை ஜூலையில்!

கொழும்பு, மே 19

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு எதிரான வழக்கு, எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரல்லாத சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தமைசட்டவிரோதமானது எனத் தெரிவித்து நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

சட்டத்தரணி அஜித் பிரசன்ன என்பவரால் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் பிரசாத் டெப், நீதியரசர்களான சிசிர டி. ஆப்ரூ மற்றும் நலின் பெரேரா ஆகியோரால் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வேறு கட்சியில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஒருவரை ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நியமிப்பது கட்சிக்காக வாக்களித்தவர்கள் மற்றும் மக்களின் உரிமையை மீறும் செயல் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மக்களின் வாக்குரிமை மீறப்படும் ஒரு செயல் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால்தான் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கும்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் கஜேந்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே 19

சர்வதேச நீதி விசாரணை நடைபெற்று, போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கும்.

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - வாகரை மாணிக்கபுரம் வாவிக் கரையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்கள்மீது கைவைத்தால் தண்டிக்கப்படுவோம் என்ற அச்ச நிலை பெரும்பான்மையினர் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்குச் சர்வதேசப் பொறிமுறை ஊடாக போர்க் குற்றவாளிகளைத் தூக்கு மேடைக்கு அனுப்ப வேண்டும்.



இலங்கை அரசு தமிழ் மக்களை வெறும் கருவிகளாகப் பயன்படுத்தியது. இதன்மூலம் இந்திய மற்றும் உலக நாடுகளினதும், கைப்பொம்மைகளாக தமிழ்த் தலைமைகளை வைத்திருக்கலாம் என்ற நம்பிக்கையிலேயே முள்ளிவாய்க்கால் இன அழிப்பை மேற்கொண்டது. ஆனால் அவர்கள் எண்ணங்கள் நிறைவேற வில்லை.

மீண்டும் ஒரு தடவை பேரினவாத ஆட்சியாளர்களாலும், இனவாதிகளாலும் தமிழர்கள் அழிக்கப்படக்கூடாது என்பதற்காகவே இந்த நினைவு கூரல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போர்க் குற்றத்தைத் தலைமை தாங்கி நடத்திய மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான கும்பல் கடந்த மே தினத்தில் மிகப் பெரிய அரசியல் எழுச்சியைக் கண்டுள்ளனர். மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன வாதிகள் மீண்டும் அரசியலுக்கு வந்தால், தமிழர்கள் மீண்டும் முற்றாக அழிக்கப்படும் நிலைமை நிச்சயமாக உருவாகும்.-என்றார். (ச)

## நிலையான அரசியல் தீர்வு தமிழருக்கு கிடைக்கவில்லை

முள்ளிவாய்க்கால் அவலம் நடந்தேறி எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஜனாதிபதி மாறியுள்ளார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், தமிழ் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வு இதுவரை கிடைக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு, வாகரையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்நீத்த சுமார் ஒரு லட்சத்து 50ஆயிரம் மக்களுக்கான நீதி உள்நாட்டு விசாரணை மூலமோ அல் லது சர்வதேச பொறிமுறை மூலமாகவோ இதுவரை கிடைக்கவில்லை என்ற ஏக்கத்துடன் எமது உறவுகளைநினைவுகூருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மட்டு.வாகரையில் இனப்படுகொலையின் 8 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு!







மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திலுள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் பிள்ளையார் ஆலய முன்றிலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தமிழரசுக் கட்சி வாகரை பிரதேச கிளையின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நினைவேந்தல் நிகழ்வின் போது பிள்ளையார் ஆலயத்தில் கூட்டு வழிபாடு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், எஸ். வியாழேந்திரன், ஞா.ஸ்ரீநேசன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் உட்படப் பலரும் கலந்து கொண்டு உயிர் நீத்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்தினர்.

மே மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை தமிழின இன அழிப்பு நாளாக பிரகடனப்படுத்தி, வடக்கு மற்றம் கிழக்கு மாகாணங்கள் மற்றும் புலம்பெயர் தேசங்களில் இனப்படுகொலையை நினைவு கூர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு!

அம்பாறை, மே 19

அம்பாறை சம்மாந்துறைப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சம்மாந்துறையைச் சேர்ந்த ஆதம்பாவா முகம்மது தஸ்லிர் (வயது-27) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை புடைவைக் கடையொன்றில் அலுமினியம் பொருத்தும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே மின்சாரத் தாக்குதலுக்கு இவர் உள்ளானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளைச் சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## பாலமுனையில் சடலம் மீட்பு!

பாலமுனை, மே 19

மட்டக்களப்பு பாலமுனைக் கடற்கரையோரத்தில் சடலம் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டது.

இது தொடர்பில் பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியமையை அடுத்தே, சடலத்தை பொலிஸார் மீட்டனர்.

55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ஏறாவூர் பாடசாலையில் தீ விபத்து!

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக் கிழமை நண்பகல் திடீரென்று தீ பரவியுள்ளது.

மேற்படி கேட்போர் கூடத்தில் ஆசியர்களுக்கு கருத்தரங்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது அங்குள்ள மின் விசிறி ஆளியை அழுந்திய போது திடீரெனத் தீ பரவியது என ஏறாவூர்ப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

பெரிய ளவில் சேதங் கள் எதுவும் ஏற்படாத வகையில் உடனடியாகத் தீ அணைக்கப்பட்டது எனப் பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

## கிழக்குப் பல்கலையில் குருதிக் கொடை!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குருதிக் கொடை நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகநிர்வாகத்தினர் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

குருதிக் கொடை வழங்குவதற்கு முன்னர் பல்கலைக்கழக சமூகத்தினர், படுகொலை செய்யப்பட்ட தமிழின மக்களை நினைவுகூர்ந்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ச)



# இலங்கைத் தடுப்பு முகாம்களிலுள்ள ஆண்கள் மீது பாலியல் வதைகள்!

அமெரிக்க அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மே 19

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னரும், தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆண்கள் பாலியல் வதைகளுக்கு உட்படுத்தப்படுவதாக அனைத்துலக மனித உரிமை அமைப்பு ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் மீதான சித்திர வதையாக, பாலியல் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன என்று அமெரிக்காவைச் சேர்ந்த All Survivors Project என்ற ஆய்வு அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. 40 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு:-

ஆண்களும், இளைஞர்களும் தற்போதும் பரந்தளவில் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்படுகின்றனர். ஆனால் அதுகுறித்த தகவல்கள் வெளி வருவதில்லை. சமூகக் களங்கம் மற்றும் சட்ட ரீதியாக ஒரு பாலுறவு குற்றம் என்பதாலும், பாதிக்கப்பட்டவர்கள் இது பற்றி வெளிப்படுத்த முன்வருவதில்லை.

37 ஆண்டு கால உள்நாட்டுப் போரில் வல்லுறவுகள் நிறைய இடம்பெற்றன. எனினும், பெண்கள் சம்பந்தமான வல்லுறவு வழக்குகளைப் போலன்றி, தடுத்து வைக்கப் பட்டிருந்த போது தாம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டோம் என்று ஆண்கள் ஒப்புக் கொண்டமை அல்லது அதுபற்றிய பதிவுகள் குறைவாகவே உள்ளன.

போரின் போதும், போருக்குப் பின்னரும் தமிழர்களுக்கு எதிராக, ஆண்கள் மீதான வல்லுறவுகள் இடம் பெற்ற தற்கான பதிவுகள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.

ஆண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைகள் பற்றிய முழுமையாக தகவல்கள் தெரிய வில்லை என்றாலும், ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் போர் முடிவுக்கு வந்த பின்னரும் நிறுத்தப்பட வில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்ட ஆண்கள் பாலியல் வன்முறைகளைச் சந்திக்கும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

போருக்குப் பின்னர் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் காவலில் உள்ள ஆண் சந்தேக நபர்கள் எவ்வாறு கொடூரமாக, மனிதாபிமான மற்ற வகையில் நடத்தப் படுகின்றனர் என்று அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

## அரச ஊழியர்களுக்கான புதிய நடைமுறை அறிமுகம்!

கொழும்பு, மே 19

அரச ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறுவதனை உறுதி செய்யும் வகையில் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் இதனைக் கட்டாயமாக்குவதற்கு பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண செயலாளர், திணைக்கள பிரதானிகள் மற்றும் அரசு மற்றும் பெரு நிறுவனங்கள் மற்றும் சட்ட ரீதியான சபை தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்து அமைச்சின் செயலாளர் ரத்னசிறி கையொப்பம் இட்ட சுற்றறிக்கை மூலம் இந்த ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

நிதி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்ட யோசனையில் இலக்கம் 373 கீழ் அனைத்து அரச நிறுவனங்களின் ஊழியர்கள் வருகை மற்றும் வெளியேறுகின்ற நேரத்தை பதிவிடுவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் 09/2009 மற்றும் 2009.04.16 திகதியிலான சுற்றறிக்கை ஊடாக வழங்கப்பட்ட ஆலோசனைக் கமைய இந்த முறையை இதுவரை செயற்படுத்துவதற்கு முடியாமல் போயிருந்தது.

அவ்வாறு பயன்படுத்த முடியாமல் போன அனைத்து அரச நிறுவனங்களின் சுற்றறிக்கைகளின் முறைக்கமைய கைவிரல் அடையாளப் பதிவிடும் இயந்திரம் பயன்படுத்துவதன் ஊடாக அலுவலகத்திற்கு ஊழியர்கள் வருவது மற்றும் செல்வதை உறுதி செய்வது தொடர்பான அறிக்கையை வைத்துக் கொள்வதற்கு அதிகாரிகள் அவசியமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.- என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க – இலங்கைக் கடற்படை அதிகாரிகளுக்கிடையில் இரண்டாவது பேச்சு



கொழும்பு, மே 19

அமெரிக்க, இலங்கைக் கடற்படை உயர் அதிகாரிகளுக்கு இடையிலான, இரண்டாவது அதிகாரிகள் மட்டப் பேச்சு நடந்து முடிந்துள்ளது.

கொழும்பிலுள்ள இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் இந்தப் பேச்சு கடந்த மே 16, 17 ஆம் திகதிகளில் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படை அதிகாரிகள் குழுவுக்கு, கடற்படையின் நடவடிக்கைப் பணிப் பாளர் றியர் அட்மிரல் பியால் டிசில்வா தலைமை தாங்கினார்.

அமெரிக்க கடற்படையின் 7 ஆவது பசுபிக் கப்பல் படைப்பிரிவு சார்பிலான அதிகாரிகள் குழுவுக்கு கப்டன் பிரையன் அன்டர்சன் தலைமை தாங்கியுள்ளார்.

இரண்டு நாடுகளினதும் கடற்படைகளுக்கு இடையிலானபரஸ்பரஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

## சுயாதீன ஆணைக்குழுக்களின் மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி!



கொழும்பு, மே 19

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்த ஆணைக் குழுக்களுக்கான புதிய முன் மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளும் முன்வைக்கப் பட்டுள்ளன.

மேலும், ஆணைக்குழுக்களின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அனைத்து ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளையும் முறைப் படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை தாமதமின்றி நிறைவேற்றவேண்டும் என ஜனாதிபதி கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்- கணக்காய்வு சட்டம் உள்ளிட்ட சட்டங்களை நிறைவேற்றுதல், பணிக்குழாமை முழுமைப்படுத்தல் போன்ற குறைபாடுகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக அந்த துறையுடன் கலந்துரையாடவுள்ளேன். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ அபேகோன், அரசசேவைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

## மூன்றாம் உலகப் போர் நெருக்கடியில் இலங்கை!

திஸ்ஸவிதாரண தெரிவிப்பு

கொழும்பு, மே 19

மூன்றாம் உலகப் போர் நெருக்கடியில் இலங்கை சிக்கும் அபாயத்தில் இருக்கிறது என்று முன்னாள் அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார்.

பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை, இந்தியாவிற்கு இடையிலான தொடர்பானது அரசியல் மற்றும் பொருளாதாரத்துடன் மட்டுப்படுத்தப் பட்டது அல்ல. மாறாக இராணுவத் தொடர்பும் இருக்கிறது.

இந்த இராணுவத் தொடர்பானது, அமெரிக்கா வரையிலும் நீண்டு செல்லக் கூடியது. இந்நிலையில் இவ் விடயத்தில் அமெரிக்காவும் தொடர்பு பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் தொடர்பு காரணமாக இலங்கை மூன்றாம் உலகப் போரில் சிக்கிக்கொள்ளும் அபாயம் காணப்படுகிறது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய ஆசிரியர்களை வரவழைத்தால் பெரியளவில் தொழிற்சங்கப் போராட்டம்

## எச்சரிக்கிறது இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம்

கொழும்பு, மே 19

இந்திய ஆசிரியர்களை மலையகத்தில் கற்பிக்க அனுமதியளித்தால் நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்றுஇலங்கைஆசிரியர்சேவை சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மருதானை சீ.எஸ்.ஆர். நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில், அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையகத்தின் நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய இரு மாவட்டங்களில் மாத்திரமே, ஜி.சீ.ஈ உயர் தரத்தில் விஞ்ஞான-கணித பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் காணப்படுகின்றன. ஏனைய மாவட்டங்களான பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், காலி, களுத்துறை போன்ற மாவட்டங்களில், விஞ்ஞான - கணித பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் இல்லை என்பது வருத்தத்துக்குரிய விடயம்.



தற்போதைய கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கின்ற இராதாகிருஷ்ணன், மலையகப் பகுதிகளுக்கு, உயர்தரத்தில் விஞ்ஞான - கணித பிரிவைக் கொண்ட 25 பாடசாலைகளை உருவாக்கித் தருகிறேன் எனக் கூறிக்கொண்டு, தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்களை மாத்திரம் பெற்றுத்தந்தார். ஆனால் கற்றலுக்குத் தேவையான மனித வளத்தைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

இவ்வாறானதொரு நிலையில், கணித - விஞ்ஞானப் பிரிவுகளை அந்தப்பாடசாலைகளில் ஆரம்பிப்பது இயலாத நிலைமையாகவே உள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில், வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி வருகின்ற நிலையில், இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை வரவழைத்து, மலையகப் பகுதிகளுக்கு கல்வியைப் போதிக்க எடுக்கும் நடவடிக்கை, பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. இவ்வாறான செயற்பாடுகளால், பிரச்சினை மேலும் அதிகரிக்கவே வாய்ப்புண்டு.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மேற்கொள்ள இருக்கும்.'எட்கா'ஒப்பந்தத்தில் முன்னோட்டமாக இதைப் பார்க்கலாம். எனவே இந்தப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணாது அரசு பாரபட்சம் காட்டுவதை இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.-என்றார்.

## தினசரி ராசி பலன் 19.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு வைகாசி திங்கள் 5 ஆம் நாள். அட்டமி திதி பிற்பகல் 1.37மணி வரை. நட்சத்திரம் அவிட்டம் காலை 6.44 மணி வரை. மரண யோகம் முழுவதும். இராகுகாலம் காலை 10.22 மணி முதல் 11.52 மணி வரை. சுபநேரம் 5.52 மணி முதல்7.22 மணி வரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாச மழை பொழிவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**ரிஷபம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள்.

**கடகம்** : புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் கவனமுடன் செயற்பட வேண்டும்.

**சிம்மம்** :நீண்ட நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.

**கன்னி:** நட்பால் ஆதாயம் உண்டு. உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**தனுசு:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** முன்கோபத்தை குறையுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்பு அதிகரிக்கும். எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

**மீனம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.


## இலங்கை–கனடா இடையே விமானசேவை உடன்படிக்கை

இலங்கை - கனடா இடையில் முறையான விமான சேவையைக்கட்டியெழுப்பும் நோக்கில் தற்போது அதிகாரிகள் மட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ள விமானசேவைஉடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும், அதன் பின்னர் உடன்படிக்கையின் அம்சங்களைச் செயற்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## புராதன தொல்பொருள்கள் பொலன்னறுவையில் கண்டுபிடிப்பு



பொலன்னறுவை, மே 19

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள்கள் திஸ்ஸமஹாராம மற்றும்பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கையின்தொல்பொருள்களை, முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இனங்கண்டு அவற்றைப் பாதுகாக்கும்படி கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பணிப்புரைவிடுத்துள்ளார்.

இதற்கமைய மத்திய கலாசார நிதியம் தொல்பொருள்களை மீட்பதற்கான பல்வேறு அகழ்வு வேலைத் திட்டங்களைமுன்னெடுத்து வந்த நிலையில், இந்தப் பொருள்கள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு கற்பிட்டியில் இடம் ஒதுக்கீடு!

புத்தளம், மே 19

சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக காணித் துண்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கமைய, கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 56.35 ஹெக்ரேயர் காணியை, 5 பாகங்களாக, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிப்பது தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கற்பிட்டிப் பிரதேசம் பல்வேறுபட்ட சுற்றுலா கவர்ச்சி மையங்களைக் கொண்டுள்ளது என்ற வகையில், சுற்றுலா அபிவிருத்திக்கு மிகப் பொருத்தமான இடமாகக் கருதப்படுகின்றது. எனினும், அந்தப் பிரதேசத்தில் தற்போது காணப்படும் ஹோட்டல் மற்றும் பிற சுற்றுலா வசதிகள் உயர் தரத்திலான சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானவையல்ல என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதனால் அந்தப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறை மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதற்கமைவாக, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் எனும் ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட மேற்படி காணிகளை ஒதுக்கீடு செய்யும் அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் 10 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை 4 கோடி 50 லட்சமாக அதிகரிப்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதன்போது பிரதேச ரீதியாக சுற்றுலாப் பயண முடிவிடங்களை விருத்தி செய்து, அதனுடன் தொடர்புடைய அடிப்படை வசதிகளைவிருத்தி செய்வது அவசியமாக உள்ளது என்று அரசால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# இனப்படுகொலை

# விசாரணை தாமதத்துக்கு காரணம் இந்தியா என்கிறது தமிழக வார இதழ்

**இலங்கையில் இடம் பெற்ற இனப்படு கொலை தொடர்பான விசாரணைகள் தாமதமடைகின்றமைக்கு இந்தியாவே காரணம் என தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'ஆனந்த விகடன்' தனது கட்டுரை ஒன்றில் தெரிவித்திருக்கின்றது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சி தொடர்பாக, தொடர்ந்து தமிழ் ஈழ மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் தமிழகத்தின் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி விகடனுக்கு தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு இது.**

"தாயிடம் பால் கொண்ட பிள்ளையரை ஒரு தடயம் இன்றி எரித்தாராம்'' இலங்கை இராணுவம். தமிழர்கள் மீது நிகழ்த்திய கொடூரத்தை எடுத்துரைக்கும் கவிஞர் வைரமுத்துவின் கண்ணீர் வரிகள் இவை.

தமிழீழம் கோரி விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே 1983 இல் தொடங்கிய போர் 2009 இல் முடிந்தது. போரில் ஒன்றரை லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதியில் இருந்தே விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களை வீழ்த்திக் கொண்டிருந்தது இலங்கை இராணுவம்.

மே 17 ஆம் திகதி யாரும் எதிர்பார்க்காத வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று இலங்கை அரசு அறிவித்தது. இது தமிழ் ஈழ உணர்வாளர்களுக்குப் பேரிடியாக இருந்தது. பிரபாகரன் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

தமிழர்களை புலிகள் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டிய இலங்கை இராணுவம், லட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்தது. இலங்கை இறுதிப் போரில் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என பலரும் கொல்லப்பட்டமையை நினைவு கூரும் விதமாக உலகத் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் தினத்தை வருடாந்தம் கடைபிடித்து வருகின்றனர். தமிழகத்தில் உள்ள தமிழ் ஈழ உணர்வுள்ள அமைப்புகளும் நினைவேந்தல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

### இனப்படுகொலைக்கு இந்தியாவின் சூழ்ச்சி!

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், இனப்படுகொலைகள் நடப்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றன என அங்கிருந்து தகவல்கள் வந்து கொண்டிருந்தன.

பொதுவாக எந்த ஒரு போரிலும் மனித உரிமைக்குழுவினர் போர் நடக்கும் இடத்துக்குச் சென்று ஆய்வு செய்வார்கள்.

போரில் மனித உரிமை மீறல்கள் நடந்தால் அதனை ஆவணப்படுத்தி சர்வேதேச சமூகத்துக்கு எடுத்துச் செல்வார்கள். இதுதான் போரின் விதிமுறையும் கூட. ஆனால், இந்திய அரசின் சூழ்ச்சி காரணமாக மனித உரிமைக் குழுவினர் இலங்கைக்குச் செல்லாமல் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

உண்மைகள் வெளி உலகத்துக்குத் தெரிந்து விடக் கூடாது என்று ராஜபக்ஷ அரசு மனித உரிமைக் குழுவுக்கு அனுமதி அளிக்கவில்லை.

போரின் போது மனித உரிமைகள் மீறப்படக்கூடா என்பதற்காகத்தான் மனித உரிமைக் குழுக்கள் அனுப்பப்படுகின்றன. ஆனால், இறுதிப் போரில் மனித உரிமைக்குழு செல்ல முடியாதது என்பது வேதனைக்குரிய விடயம்.

### பிரபாகரன்

இறுதிக் கட்டப் போரில் இனப்படுகொலை நடப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டிருந்தன. அப்போது இந்தப் போரை கண்காணிக்க இந்தியாவுக் கான ஐ.நா. துணைப் பொதுச் செயலாளர் விஜய் நம்பியார் அந்த இடத்துக்குச் செல்ல வேண்டும். அதுவே அவருடைய கடமையும் கூட.

ஆனால், அவர் அங்கு போகவில்லை. காலநிலை சரியில்லை என்று பாதியிலேயே தடுத்து நிறுத்தப்படுகிறார். விஜய் நம்பியாரின் அண்ணன் சதிஷ் நம்பியார்தான் இலங்கைப் போரை நடத்துவதற்கான ஆலோசகர்.

> இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது குறித்த எந்தத் தகவல்களையும் இலங்கை அரசு கூற மறுக்கிறது.

போரை நடத்தும் ஆலோசகராக அண்ணன் இருக்கும் போது தம்பி எவ்வாறு அந்த இடத்துக்குச் செல்வார்? எனவே, இருவரும் திட்டமிட்டு அதைத் தவிர்த்து விட்டனர். அது மட்டுமன்றி, விஜய் நம்பியாருடன் வந்த மற்ற ஐ.நா. அதிகாரிகளையும் தடுத்து நிறுத்தி மிரட்டியுள்ளனர்.

அவ்வாறு திரும்பி வந்த ஐ.நா. அதிகாரி ஒருவரை நான் சந்தித்துப் பேசினேன். விஜய் நம்பியாரும், சதிஷ் நம்பியாரும் சேர்ந்து கொண்டு ஐ.நாவின் அனைத்துச் சட்ட விதிகளையும் மீறினார்கள் என்பது அம்பலமாகியுள்ளது. இலங்கையின் மீறல்கள் ஒருபுறம் இருக்க ஐ.நாவின் நடவடிக்கைகள் அதைவிட மோசமானவையாக இருந்தன.

போரில் தவறு இழைத்தவர்கள் குறித்து இலங்கை அரசே விசாரிக்கலாம் என்று ஐ.நா. சொன்னது. ஆனால் இலங்கை அரசு இன்றுவரை சிறு துளி அளவு கூட விசாரணையைத் தொடங்கவில்லை என்பதுதான் உண்மை.

### குற்றவாளியை குற்றவாளியே விசாரித்த கொலைக் களம்

இலங்கை அரசு இப்படி தப்பித்துக் கொண்டிருப்பதற்கு ஐ.நாவின் மோசமான செயற்பாடுதான் காரணம். குற்றவாளியே குற்றவாளியை விசாரித்த கொலைக்களம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்.

இது குறித்து வீக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவலில், இறுதிக் கட்டப் போரில் நடப்பது என்ன என்பது குறித்து இந்திய அதிகாரிகளுக்குத் தெரியும் என்று கூறப்பட்டுள்ளது.

இனப்படுகொலை நடவடிக்கையில் இவ்வாறு என்றால், போரின் போது கைது செய்யப்பட்டவர்களை இலங்கை அரசு இதுவரை விடுதலை செய்யவில்லை.

போரின் போது கைது செய்யப்படுபவர்களைப் போர் முடிந்து விட்டால் விடுவிப்பதுதான் விதி. அது மட்டுமன்றி கைது நடவடிக்கை என்பதே ஐ.நாவின் மேற்பார்வையில்தான் நடக்க வேண்டும். இதுபோன்ற எந்த விதிமுறைகளும் இல்லாமல் அநீதி இழைத்துள்ளது இலங்கை.

இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது குறித்த எந்தத் தகவல்களையும் இலங்கை அரசு கூற மறுக்கிறது.

அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போரில் மனித உரிமை மீறல் நடந்துள்ளன என்பதற்கான ஆதாரங்களை வழங்கி பல்வேறு இடங்களில் நாங்கள் பேசி உள்ளோம். அநீதி இழைக்கப்பட்ட தமிழர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

### ஈழத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவில்லை

சர்வதேச நீதிபதிகளும் இலங்கையின் மீது விசாரணை தேவை என்று கூறிய பின்பும், அதில் இனப்படுகொலை குற்றவாளியாக ஒருவரைக் கூட இலங்கை அரசு கைதுசெய்யவில்லை. ஈழத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் இலங்கை அரசு எடுக்கவில்லை.

அதற்கு இந்திய அரசும் ஒருவகையில் காரணமாக உள்ளது. 8 வருடங்களாக அந்த மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதியைத் தடுத்து வரும் பெரும் பணியை இந்திய அரசு செய்து வரு கிறது.

அதற்கானகாரணம்என்னவென்றால் சர்வதேச விசாரணை நடந்தால் இந்திய அரசும் குற்றவாளி கூண்டில் நிற்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதுதான்.

அண்மையில் ஜெனிவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 34 ஆவது கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா களமிறங்கிய நிலை மிகவும் கவலைக்குரியது. இலங்கையில் நடந்த போரில் தவறிழைத்தவர்களை நாங்களே விசாரணை செய்து இரண்டு ஆண்டுக்குள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறியது இலங்கை அரசு. ஆனால் இதுவரை எந்த விசாரணையும் இல்லை.

இந்த நிலையில்தான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கை அரசுக்குக் கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கால நீட்டிப்பை இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள்தான் வாங்கிக் கொடுத்துள்ளன. அதற்கான காரணம் என்னவென்றால் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு ஆதரவாக மைத்திரிபால சிறிசேனா தலைமையிலான அரசு இருக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக மூன்று நாடுகளும் இவ்வாறு செய்துள்ளன.

(நன்றி: விகடன்)




பொன்.வேணு கிருஷ்ணா

**வட கொரியா மீண்டும் புதிய 'பேலிஸ்டிக்' ஏவுகணை சோதனை; 700 கி.மீ. பறந்தது**

வட கொரியா தனது மேற்கு கடற்கரை பகுதிக்கு அருகிலிருந்து பேலிஸ்டிக் ஏவுகணை ஒன்றை ஏவியுள்ளதாகத் தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

வட கொரிய தலைநகர் பியோங்யாங்கிற்கு வட மேற்கு புற பகுதியான



(14 மே 2017) மாதம் தலைநகரின் வட கொரியா நடத்திய இராணுவ அணிவகுப்பு

குஸாங் அருகிலிருந்து ஏவுகணை ஏவப்பட்டதாகவும், 700 கிலோமீட்டர் தூரம் ஏவுகணை பறந்ததாகவும் தென் கொரியா கூறியுள்ளது.

வட கொரியா தொடர்ச்சியான பல ஏவுகணை சோதனைகளை நடத்தி சர்வதேச கண்டனங்கள் மற்றும் அமெரிக்கவுடனான உறவில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற இரு ஏவுகணை சோதனைகளில், ஏவுகணை ஏவப்பட்ட சில நிமிடங்களிலே அதன் ராக்கெட்கள் வெடித்துச் சிதறியமையால் சோதனைகள் தோல்வியில் முடிந்தன.

இந்த சமீபத்திய ஏவுகணை சோதனைக்கு தென் கொரியா மற்றும் ஜப்பான் தனது கண்டனங்களை தெரிவித்துள்ளன.

தென் கொரியாவின் புதிய அதிபர் மூன் ஜே-இன் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கத் தனது பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டத்தைக் கூட்டியுள்ளார் என யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வட கொரியாவின் ஏவுகணை சோதனைக்கு கிம் ஜாங்-உன்னின் சித்த பிரமையே காரணம்**

(15 மே 2017) வட கொரியாவின் தலைவர் கிம் ஜாங்-உன்னுக்கு சித்த பிரமை பிடித்திருப்பதாக, வட



கொரியா மீண்டும் புதிய பேலிஸ்டிக் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் அவைக்கான தூதர் நிக்கி ஹேலி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தென் கொரியாவில் புதிய அதிபர் பதவி ஏற்றுள்ள சில நாட்களில் நடைபெற்றுள்ள இந்த ஏவுகணை சோதனை, தென் கொரியாவுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை என்று ஏ.பி.சி. நியூஸிடம் அவர் கூறியுள்ளார்.

வட கொரியா தொடர்பான விடயங்களில் அமெரிக்கா தன்னுடைய கடும் அணுகுமுறையைத் தொடரும் என்று ஹேலி தெரிவித்திருக்கிறார்.

குசொங்கின் வட மேற்குப் பகுதியில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை 2 ஆயிரம் கிலோமீட்டர் உயரம் வரை சென்றதாக ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வட கொரியாவோடு ஆழமான நட்புறவு கொள்ள விரும்புகிற தென் கொரியாவின் புதிய அதிபராக பொறுப்போற்றுள்ள மூன் ஜயே-இன் இந்த ஏவுகணை சோதனையை "பொறுப்பற்ற ஆத்திரமூட்டல்" என்று விமர்சித்துள்ளார்.

கட்டுப்பாட்டுடன் இருக்க சீனா வலியுறுத்தியுள்ள நிலையில், வட கொரியாவுக்கு எதிராக "வலுவான தடைகளை" விதிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார்.

**"சந்திப்பு கிடையாது"**

வட கொரியாவின் ஏவுகணை சோதனை ஐக்கிய நாடுகள் அவையால் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டு வடகொரியா நடத்தியுள்ள தொடர் ஏவுகணை சோதனைகள், உலக நாடுகளுக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளதோடு, அமெரிக்காவோடு பதற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த மாதம் நடைபெற்ற இரு ஏவுகணை சோதனைகளில், ஏவுகணை ஏவப்பட்ட சில நிமிடங்களிலேயே அதன் ராக்கெட்கள் வெடித்து சிதறியமையால் சோதனை தோல்வியில் முடிந்தது.


கிம் ஜாங்-உன்னை நல்லதொரு சூழ்நிலையில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தால் மிக்க மகிழ்ச்சியாக இருக்கும் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்த பின்னர், சூழ்நிலைகள் நல்லனவாக அமைந்தால் அமெரிக்காவோடு பேச்சுநடத்த தயார் என்று வட கொரியா சமீபத்தில் தெரிவித்திருந்தது.

இத்தகைய சந்திப்புக்களை உருவாக்குவதற்கு ஏவுகணைகளை அனுப்புவது சரியான வழியாக இருக்காது என்று தெரிவித்திருக்கும் ஹேலி, எம்முடைய நிபந்தனைகளை ஏற்காத வரை அவரோடு நாங்கள் சந்திக்கத் தயாராக இல்லை என்று கூறியுள்ளார்.

**புதிய வகை ஏவுகணையா?**

இந்த ஏவுகணை எவ்வாறு செலுத்தப்பட்டது என்பது இன்னும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் சோதனை செய்த ஏவுகணைகளை விட அதிக தொலைவு சென்று தாக்கக்கூடியதாக இருக்கலாம் என்பதை இந்த ஏவுகணை சோதனை காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜப்பானிய கடலில் விழுவதற்கு முன்னால், இந்த ஏவுகணை ஏறக்குறைய




30 நிமிடங்கள் பறந்தது. எனவே புதிய வகை ஏவுகணையாக, இது இருக்க லாம் என்று ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஏவுகணை 700 கிலோமீட்டர் (435 மைல்) தொலைவையும், 2 ஆயிரம் கிலோமீட்டருக்கு (1,245 மைல்) அதிகமான உயரத்தையும் அடைந்தது. கடந்த பெப்ரவரி மாதம் வட கொரியா ஏவிய இடைநிலை தொலைவு தாக்கும் ஏவுகணையை விட இது அதிக சக்தி வாய்ந்ததாகும் என்று அமைச்சர் டோமோமி ஐனாடா கூறியிருக்கிறார்.

கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் பேலிஸ்டிக் ஏவுகணைகள், பூமியின் வளிமண்டலத்திற்கு அப்பால் நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் உயரத்தைத் தொடுகின்ற சக்தியுடையவை.

இவ்வளவு உயரம் சென்றுள்ளதற்கு ராய்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு கருத்து தெரிவித்திருக்கிற நிபுணர்கள், பாய்ந்து தாக்கும் தொலைவை குறைத்து, உயரமான இடத்திலிருந்து இது ஏவப்பட்டிருக்கலாம். இதன் தாக்குதல் தொலைவு குறைந்தது 4 ஆயிரம் கிலோமீற்றராக இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வகையான ஏவுகணை பற்றி ஆராயப்பட்டு வருகிறது. ஆனால், இதனுடைய பறத்தல் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் பேலிஸ்டிக் ஏவுகணைகளின் சக்திக்கு இணையானதாக இல்லை. கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் பேலிஸ்டிக் ஏவுகணைகள் 6 ஆயிரம் கிலோமீட்டருக்கு மேலான தொலைவில் இருக்கும் அமெரிக்க பெருநிலப்பகுதியை தாக்கும் சக்தியுடையவை என்று அமெரிக்க பசுபிக் கட்டளையகம் தெரிவித்திருக்கிறது.

வட கொரியா இரண்டு வகையான கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் பேலிஸ்டிக் ஏவுகணைகளை வடிவமைத்து வருவதாக நம்பப்படுகிறது. ஆனால், அத்தகைய எந்த வகையும் இன்னும் சோதிக்கப்படவில்லை.

**பதில் நடவடிக்கை**

இந்த ஏவுகணை சோதனையை தொடர்ந்து, தன்னுடைய பாதுகாப்பு கவுன்ஸிலின் அவசர கூட்டம் ஒன்றை தென் கொரியாவின் அதிபர் மூன் ஜயே-இன் கூட்டியுள்ளார்.

வட கொரியாவோடு பேச்சு நடத்த தென்கொரியா தயாராக உள்ளது. ஆனால், அதற்கு வடகொரியா தன்னுடைய அணுகுமுறையில் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்று தென்கொரிய அதிபரின் செய்தி தொடர்பாளர் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளையில், சீனாவில் முக்கியமானதோர் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டுள்ள தென் கொரிய ஆளும் கட்சியின் உறுப்பினர் ஒருவர், வட கொரிய பிரதிநிதிகளிடம் நேரடியாக இதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்.


ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இந்த ஏவுகணை சோதனையால் கவலையடைந்துள்ளார் என கிரம்ளின் செய்தி தொடர்பாளர் கூறியிருக்கிறார்.

வட கொரியாவின் ஒரேயொரு கூட்டாளியாக இருக்கின்ற சீனா, இந்த ஏவுகணை சோதனை தொடர்பாக அனைத்து தரப்பினரும் கட்டுப்பாட்டோடு செயற்பட வேண்டும் என்று கூறியிருக்கிறது

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



150

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### முதலாவது கட்டச் சுற்றுப் பேச்சு

பேச்சுக்கெனச் செம்மையாக நெறிப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலோ அன்றி மூலோபாய அணுகு முறையோ இருக்கவில்லை. இரு தரப்பினரும் தமது சொந்த நிகழ்ச்சி நிரல்களையும் விருப்புக்களையும் குறிக்கோள்களையும் கொண்டிருந்தனர். சமாதானப் பேச்சுகள் சம்பந்தமாக, வழமையாக நாம் கடைப்பிடிக்கும் அணுகுமுறையையும் அதற்கான நியாயப்பாட்டையும் நான் விளக்கிக் கூறினேன்.

மிகவும் சிக்கல் நிறைந்த தமிழரின் தேசியப் பிரச்சினையை இரு மட்டங்களில், இரு பரிமாணங்களில் அணுகலாம். ஒன்று, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அவசர, ஜீவாதார, மனிதாபிமானப் பிரச்சினைகள். இரண்டாவது, இன நெருக்கடிக்கு மூலமான அடிப்படைப் பிரச்சினைகள். இந்த இரு பரிமாண அணுகுமுறை, எமது மக்களின் யதார்த்த வாழ்நிலை மெய்ம்மையுடன் ஒத்திசைவானதாக அமையப் பெற்றிருக்கின்றது. இரு தசாப்தங்களுக்கு மேலாக, இடைவிடாது தொடர்ந்த கொடிய யுத்தத்தின் விளைவாக எமது மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் படிப்படியாகப் படுமோசமடைந்து ஒரு பெரிய மனிதாபிமான நெருக்கடியாக விஸ்வரூபம் பெற்றுள்ளன. ஆகவே தான், இனப்பிரச்சினையின் மிகச் சிக்கலான அடிப்படைகள் பற்றி ஆழமாக அலசிப் பார்ப்பதற்கு முன்பாக, எமது மக்களின் உடனடியான, அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென நாம் எப்பொழுதுமே வலியுறுத்தி வந்திருக்கிறோம். இதன் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்கள் கட்டம் கட்டமாக அமைய வேண்டும் என்றும் ஆரம்ப கட்டப் பேச்சுகளில் எமது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்றும் எமது இயக்கம் வாதாடி வந்துள்ளது. இப்படியான அணுகுமுறையையே தற்போதைய பேச்சுக்களிலும் கடைப்பிடிப்பது அவசியமென நான் வலியுறுத்தினேன். சிறீலங்கா பிரதிநிதிகளும், எதுவித ஆட்சேபமும் இன்றி, எமது நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டனர். இதன்படி எமது மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு முதன்மை கொடுத்து, பேச்சுக்களை கட்டம் கட்டமாக முன்னெடுப்பதென இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது.

சமாதானப் பேச்சுகளைக் கட்டம் கட்டமாக முன் நகர்த்திச் செல்வதாயின், போர் நிறுத்த உடன்பாட்டை நிலைப்படுத்திப் பலப்படுத்துவதோடு, தமிழ் மக்களின் அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு ஒரு பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பு அத்தியாவசியமானது. போர் நிறுத்த உடன்பாடு என்ற அத்திபாரத்தின் மீதே சமாதான முயற்சிகள் முழுமையாகத் தங்கி நின்றன. அத்துடன், இந்தப் போர் ஓய்வு உடன்பாடு இரு தரப்பினரதும் படைபலச்சம வலுவில் கட்டப்பட்டிருந்தது. போர் நிறுத்த உடன்பாட்டைச் சீரான முறையில் செயற்படுத்துவதிலேயே போர் நெருக்கடியைத் தணித்து, மக்களது வாழ்வில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது சாத்தியமாகும். சமாதான முயற்சிகளை மேம்படுத்துவதற்கு, போர் நிறுத்த உடன்பாட்டைப் பலப்படுத்துவது அவசியமென வாதாடிய நான், அரச படைகளின் பகைமையான கடும்போக்கு போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாக எழுந்துள்ளதெனச் சுட்டிக்காட்டினேன். போர் நிறுத்த உடன்பாட்டின் முக்கிய விதிகளையும், கடப்பாடுகளையும் நிறைவுசெய்ய மறுத்துவரும் சிறிலங்கா இராணுவம், தொடர்ந்தும் வீடுகள், பாடசாலைகள், கல்லூரிகள்; கோவில்கள், விடுதிகள் என்ற ரீதியில் எமது நகரங்கள், பட்டினங்களிலுள்ள பொதுக் கட்டடங்களை ஆக்கிரமித்துநிற்கின்றன. தமது சொந்த வீடுகள், கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள், துன்பம் நிறைந்த அவல வாழ்க்கையை எதிர்கொண்டு சீரழிந்து நிற்கின்றனர். உயர் பாதுகாப்பு வலயம் என்ற சாக்கில், தமிழ் தாயகத்தின் வளம்மிகு நிலங்களையும், பழம் பெரும் கிராமங்களையும் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம், எமது மக்களின் வாழும் சுதந்திரத்தையும் வீடு திரும்பும் உரிமையையும் மறுத்து வருகிறது எனக் குற்றஞ்சாட்டினேன். அரச ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கும் பொது இடங்களைக் குறித்துக்காட்டும் வரைபடங்கள் உட்பட வேறு பல தகவல்கள் அடங்கிய ஆவணங்களையும் அரச பிரதிநிதிகளிடம் நாம் ஒப்படைத்தோம். உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றியும் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஒரு கூட்டுக் குழுவை நியமிக்கலாமென அமைச்சர் மிலிந்த மொறகொட யோசனை தெரிவித்தார்.


கூட்டுக் குழுக்களை அமைத்து ஆராய்ச்சியில் ஈடுபடுவதை விடுத்து, ஓர் இடைக்கால நிர்வாக சபையை நிறுவும் அவசியத்தை நான் வலியுறுத்தினேன். மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற எமது மக்களின் முக்கிய பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஒரு நிறுவனக் கட்டமைப்பு அவசியம். விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் பிரதான பங்கு வழங்கி, பொருத்தமான அதிகாரங்களுடன் வடக்குகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாக சபை அமைவதன் அவசியத்தை எடுத்து விளக்கிய நான், எமது அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, இத்தகைய ஒரு நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதற்கு, இந்திய அரசு முன்வந்தது என்ற வரலாற்றையும் நான் சுட்டிக் காட்டினேன். வடகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாக சபை நிறுவப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்ததை நினைவுபடுத்தியதுடன், இந்த யோசனைக்கு சிங்கள மக்கள் ஆணை வழங்கியுள்ளதால் இப்படியான ஒரு நிறுவனத்தை வெகு விரைவில் நிறுவி விட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு கடப்பாடு உண்டு என்பதை வலியுறுத்தினேன்.

புனர்வாழ்வு, அபிவிருத்தி போன்ற விடயங்களைக் கையாள்வதற்குப் போதுமான அதிகாரங்களைக் கொண்ட ஒரு பரந்த நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதில் எழக்கூடிய அரசமைப்பு சிக்கல்கள் பற்றி ஒரு நீண்ட விளக்கம் கொடுத்தார் பேராசிரியர் பீரிஸ். சிறிலங்காவின் அரசியல் யாப்பு ஓர் இறுக்கமான, நெகிழ்வற்ற சட்ட அமைப்பாக இருப்பதால், பரந்துபட்ட அதிகாரத்துடன் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க அரசமைப்பு இடமளிக்காது என்பதுதான் பேராசிரியர் பீரிஸின் மையமான வாதமாக அமைந்தது. அப்படித்தான் ஓர் இடைக்கால நிர்வாக சபையை நிறுவினாலும் அது இலங்கையின் அரசமைப்பை மீறுவதாக அமையும் என்றும், அதற்கு ஜனாதிபதியும் பிரதம நீதியரசரும் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் பீரிஸ் விளக்கினார். எனவே, இப்படியான ஒரு பயனற்ற முயற்சியில் நாம் இறங்கினால், ஜனாதிபதியை இந்த விவகாரத்தில் தலையிடச் செய்துபேச்சுகளை குழப்ப அவருக்கு நாம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கி கொடுப்பதாக முடியும் என்றார் பேராசிரியர். அரசமைப்புச் சிக்கல்களுக்கு பரிகாரம் கண்டு, ஒரு பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் வழிவகைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு போதுமான அவகாசம் தரும்படி பேராசிரியர் பீரிஸ் என்னைக் கேட்டுக் கொண்டார். அத்துடன், ஒரு புதிய யோசனையையும் அவர் தெரிவித்தார். ஓர் இடைக்கால நிர்வாக சபைக்கு மூலக் கரு போன்று, ஒரு தற்காலிக அமைப்பை உருவாக்கி, அப்படியாக அதற்கு நிர்வாக அதிகாரங்களை வழங்கி, காலப்போக்கில் அதனை ஒரு முறையான நிர்வாகக் கட்டமைப்பாக முழுமை பெறச்செய்யலாம் என்றார் பேராசிரியர்.



(தொடரும்...)





வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நேற்று முன்தினம் புதன்கிழமை கணித மூலவள நிலையம் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியின் அதிபர் சி.குருகுலலிங்கம் தலைமையில் வடமராட்சி கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரனால் கணித மூலவள நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (ஐ)

# விசா காலாவதியான நிலையில் 32 இலங்கையர் இஸ்ரேலில்!

## பிணை வழங்கியுள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானம்

கொழும்பு, மே 19

விசா காலாவதியான நிலையில் 32 இலங்கையர் இஸ்ரேலில் தங்கியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

சட்டவிரோதமாக இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்கள் சார்பாக பிணை வழங்கியுள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுஎன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஜி.எஸ் விதானகே தெரிவித்துள்ளார்.

32 இலங்கையர்கள் இஸ்ரேலில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளமையின் காரணமாக, அந்த நாட்டில் ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பம் அற்றுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

6 தொடக்கம் 8 மாத கால அடிப்படையில் இஸ்ரேலில் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றவர்கள், விசா காலாவதியான பின்னரும் நாடு திரும்பாமல் உள்ளனர் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, மே 19

யாழ்ப்பாணம் மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் வ.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன. (ச)

## விளையாட்டு விழா

சாவகச்சேரி, மே 19

யாழ்ப்பாணம் சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் போதகர் அருட்பணி நே. நு.ஜெயநேசன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி லயன்ஸ்கழகச்செயலாளர் இ.கோகிலனும் கலந்து கொள்வர். (ச)

# நிர்ணய விலைகளில் அரிசியை விற்பனை செய்ய முடியவில்லை

## வவுனியா வர்த்தக சங்கம் தெரிவிப்பு

வவுனியா, மே 19

நிர்ணய விலையில் அரிசியை விற்பனைசெய்ய முடியாதுள்ளது என்று வவுனியா வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.கே.மஸ்தான் ஆகியோரின் முன்னிலையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரிசியைக் கொழும்பில் 92 ரூபாவுக்குத்தான் கொள்வனவு செய்ய முடிகிறது. அங்கிருந்து இங்கு கொண்டுவரும் பாரவூர்திக் கூலி, ஏற்றி இறக்கும் கூலி, வர்த்தகருக்கான இலாபம் என்பன வைத்தே விற்க வேண்டும். இப்படி இருக்கையில் நிர்ணய விலையான 80 ரூபாவுக்கு விற்பனைசெய்ய முடியவில்லை.

உள்ளூர்நெல்லையும்பொலன்னறுவை போன்ற வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் அதிக பணம் கொடுத்து கொள்வனவு செய்கிறார்கள். அதனால் நாங்களும் அதிக விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை. இதனால் கட்டுப்பாட்டு விலை தொடர்பில் ஒரு மீளாய்வு செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதற்குப் பதில் அளித்த இணைத்தலைவரும், வர்த்தக கைத்தொழில் அமைச்சருமான அமைச்சர் றிசாத், கட்டுப்பாட்டு விலைக்கு கூட விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியும் என நினைகிறேன். தற்போது கூறப்பட்டுள்ள விடயம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யப்படும்.- என்று தெரிவித்தார். (ஐ-100)

## பகவத்கீதையின் வாராந்த விளக்கவுரை

யாழ். சின்மயா மிஷனில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.45 மணி முதல் 8.45 மணிவரை யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியால் ஸ்ரீமத் பகவத்கீதை வாராந்த விளக்கவுரை வழங்கப்பட்டு வருகிறது.

இதில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமத் பகவத் கீதையின் ஏழாம் அத்தியாயமான 'ஞான விக்ஞான யோகம்' பகுதியில் "யார் இறைவனிடம் சரணடைவதில்லை?" என்றதலைப்பில் விரிவுரை நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து பயன் பெறுமாறு வேண்டப்படுகின்றனர். (ஐ)

# மன்னார் மாவட்டப் புதிய செயலகத்தை பிரதமர் ரணில் இன்று திறந்து வைப்பார்

மன்னார், மே 19

மன்னாரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மன்னார் மாவட்ட செயலகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜகர அபேவர்த்தனமற்றும்உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் நிமல் லங்ஸா ஆகியோரின் அழைப்பின் பேரில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஐ.சாள்ஸ் நிர்மலநாதன், கே.காதர் மஸ்தான் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் புதிய கட்டடத் திறப்பு விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன. (ஐ-112)



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபரும் பிரதம விருந்தினருமான இரத்தினம் பாலகுமாரின் பாரியார் திருமதி செந்தில்மணி பாலகுமார் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் மேடையில் பிரதம விருந்தினர் இரத்தினம் பாலகுமார், நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கு.ஒ.அன்ரன், பாடசாலை அதிபர் மகேசன் கஜேந்திரன், பரிசில் நிதிய பொருளாளர் இ.இராஜ்குமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

இதன்போது 50 இடைநிலை மாணவருக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆங்கில நூல்களை இராஜலிங்கம் என்பவர் அன்பளிப்புச் செய்தார். தொடர்ந்து நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.ஒ.அன்ரன் பரிசில் வழங்கினார். (ஐ)

# பௌத்த தீவிரவாதிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்குக!

## விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஹரீஸ் வலியுறுத்து



கொழும்பு, மே 19

கடந்த தேர்தல் பிரசாரத்தின்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அளித்த வாக்குறுதியின்படி பௌத்த தீவிரவாதிகள் மீது அவசரமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத் தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனவாதச் செயற்பாடுகள் தொடர்பில் அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்த தீவிரவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் வன்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரரின் காட்டுமிராண்டித்தனமான இனவாதக் கருத்துக்கள் மற்றும் செயற் பாடுகள் முஸ்லிம்களைப் பீதியடையச் செய்துள்ளன.

அண்மையில் பொலனறுவை, ஒனேகம பிரதேசத்துக்குச் சென்று அவர்களின் மற்றுமோர் இனவெறியாட்டத்தை அரங்கேற்றி இருக்கின்றார்கள். இதன்போது ஞானசார தேரர் முஸ்லிம்களின் ஏக இறைவனான அல்லாஹ்வையும், புனித அல்-குர்ஆனையும் தூசித்து மிக மோசமாகப் பேசி இருக்கின்றார். இது முஸ்லிம்களை சண்டைக்கு வலிந்திழுக்கின்ற செயலாகவே இருக்கின்றது.

அதேவேளை, வெள்ளம்பிட்டி, கொஹிலவத்தை இப்றாஹிமியா ஜும்மா பள்ளிவாசல் மீது இனவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் மூதூர் செல்வநகர் அருகிலுள்ள முஸ்லிம் கிராமத்தில் இனவாதிகள் அட்டூழியம் புரிந்துள்ளனர்.

அவர்கள் தொடர்ச்சியாக இனங்களுக்கிடையில் காணப்படும் நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இந்த நல்லாட்சியை உருவாக்குவதற்கான தேர்தல் கால பிரசாரத்தின் போது 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதமாகச் செயற்படுகின்ற ஞானசார தேரரை சிறைக்குள் தள்ளி தகுந்த நடவடிக்கை எடுப்போம்' என்று கூறினார். அப்படித் தெரிவித்தே மக்களின் வாக்குப் பெற்று நல்லாட்சி அரசு ஆட்சிக்குவந்தது.

இனவாதச் செயற்பாட்டு பிரதானியான ஞானசார தேரர் விடயத்தில் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் ஏனைய செயற்பாட்டாளர்கள் அடங்கிப் போகின்ற நிலை ஏற்பட வழிவகுக்கும். இல்லாவிட்டால் முஸ்லிம் இளைஞர்களும் மக்களும் பொறுமை இழந்து வீதிக்கு வருகின்றபோது பெரும் விபரீதம் ஏற்படும்.

எதிர்வரும் புனித ரம்ழான் நோன்புக் காலத்தில் முஸ்லிம்கள் அதிகமாக இரவு நேர வணக்கங்களில் ஈடுபடுகின்ற சூழ்நிலையில் இனவெறியர்களின் இவ்வாறான செயற்பாடு முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அவர்கள் தம்மை தற்காத்துக் கொள்ள வேண்டிய தேவை உருவாக்கப்பட்டுள்ளது.-என்றார்.

## இந்திய மீனவர் படகுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, மே 19

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் 42 படகுகளை விடுவிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவப் படகுகளை விடுப்பதற்கு வடமாகாண மீனவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்திய மீனவப் படகுகளை விடுவிப்பதற்கு முன்னர் இலங்கை கடற்பரப்புக்குள் மீண்டும் இந்திய மீனவர்கள் பிரவேசிக்காமை உள்ளிட்ட நிபந்தனைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிபந்தனைகளை இந்தியத் தூதரகம் ஊடாக அந்நாட்டு மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் வட பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.- என்றார்.

## மகளிர் தலைமைத்துவ மாநாடு



தெற்காசிய மகளிர் வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை மகளிர் வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டு மகளிர் தலைமைத்துவ மாநாடு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

## ரம்ழானை முன்னிட்டு சவூதி அரசால் பேரீச்சம் பழங்கள் கையளிப்பு!





புனித ரம்ழான் நோன்பை முன்னிட்டு இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக சவூதி அரேபிய அரசால் 150 மெட்ரிக் தொன் பேரீச்சம் பழங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்த பேரீச்சம் பழங்களை உத்தியோகபூர்வமாக இலங்கைக்குக் கையளிக்கும் நிகழ்வு கொழும்பு தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகப் பிரதானி முஹம்மட் அல் ஆய்பால் தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீமிடம் பேரீச்சம் பழங்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சவூதி அரேபியாவின் நிதி அமைச்சு சார்பில் இரு பிரதிநிதிகளும், கிங் சல்மான் மனிதாபிமான உதவிகள் அமைப்பின் பிரதிநிதிகள் இருவர் உட்பட முஸ்லிம் சமய விவகார அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## அடுத்த வருட கல்வியாண்டுக்கான புத்தகங்கள் அச்சிடும் பணி ஆரம்பம்

கொழும்பு, மே 19

2018 ஆம் கல்வி ஆண்டுக்குத் தேவையான பாடசாலைப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஐ.கே. பி.இலங்கசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடப் புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுக்காக 4 கோடி 10 லட்சம் பாடப் புத்தகங்கள் தேவையாக உள்ளன.

அவற்றில் ஒரு கோடி பாடப் புத்தகங்கள் தற்போது பயன்படுத்தப்படும் பாடப் புத்தகங்களின் ஊடாகப் பூர்த்தி செய்யப்படவுள்ளன. இவை அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் பிரசுரிக்கப்படவுள்ளன.

அடுத்த வருடம் பாடசாலைகளின் 3 ஆம், 4 ஆம் தரங்களுக்குத் தேவையான பாடசாலைப் பாடப்புத்தகங்கள் புதிதாகப் பிரசுரிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை பாடப் புத்தகங்களை விநியோகிப்பதே எமது இலக்கு. -என்றார்.

## இலங்கையில் துரிதமாக இடம்பெற்றுவரும் காடழிப்பு

கொழும்பு, மே 19

இலங்கையில் அதிகளவில் காடழிப்பு இடம்பெற்று வருகின்றது. அதன்படி, ஆண்டொன்றுக்கு 8 ஆயிரம் ஹெக்டேயர் வரை அழிக்கப்பட்டு வருவதாக சூழல் பாதுகாப்பு மத்திய அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புதிய நீர்பாசனத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் காரணமாகப் பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று மீள்குடியேற்ற நடவடிக்கை காரணமாகவும் பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அனுராதபுரம், அம்பாந்தோட்டை, புத்தளம், அம்பாறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள காடுகள் அதிகமான அழிவுகளைச் சந்தித்துள்ளன.

இலங்கையில் தற்போது, 29.7 சதவீதமான காடுகள் மாத்திரம் காணப்படுகின்றன. அதனை 2022 ஆம் ஆண்டு 32 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அந்த இலக்கை எட்ட வேண்டுமானால் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 650 ஹெக்டேயர் நிலத்தில் புதிதாகக் காடுகளை உருவாக்க வேண்டும். தற்போது கைவிடப்பட்டுள்ள அரச காணிகளை இந்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முடியும்.-என்றார்.

# தமிழ் இனப்படுகொலையை நிகழ்த்தியவர்கள் 8 ஆண்டுகள் கடந்தும் தண்டிக்கப்படவில்லை!

சென்னை,மே 19

முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலை நிகழ்த்தப்பட்டு 8 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், அந்த இனப்படு கொலைகளை நிகழ்த்தி விட்டு, சுதந்திரமாக வாழ் கின்ற இலங்கைப்படையி னரும், அரச தலைமைகளும் இன்னும் தண்டிக்கப்பட வில்லை.

-இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சீமான் தெரிவித் துள்ளார்.

இறுதிக்கட்ட போரின் போது உயிரிழந்த தமிழ் மக்க ளுக்கு அஞ்சலி செலுத்தும் நினைவேந்தல் நிகழ்வுகள் இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளில் நேற்று உணர்வு



பூர்வமாக அனுஷ்டிக்கப்பட் டன. இந்நிலையில், இது தொடர்பில் சீமான் வெளி யிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

8 வருடங்களுக்கு முன்னர் கண்ணீரும், செந்நீரும் பெருக் கெடுத்த இந்த நாள்களில்தான் தன் சொந்த இனம் அழிகின் றமையை கண் முன்னே காண நேர்ந்த துயரம் தமிழ் இனத் துக்கு ஏற்பட்டது. நமது சகோ தரர்கள், உற்றார், உறவினர்கள் துடி துடித்து இறக்கும் செய்தி கேட்டு, ஓடிவந்து உதவ முடி யாத கையறு நிலையில் தமி ழக உறவுகள் இருந்தனர்.

தாய் மண்ணுக்காக உயிரை இழக்கத் துணிவது உத்தமம் தான். ஆனால் உயிரை இழக்க தாய் மண் ஒன்று வேண்டுமே. நமக்கென இந்தப் பூமியில் ஒரு தேசம் வேண்டும் என் பதை உணர்ந்துதான் தமிழ் மக்கள் தமது தாய் மண்ணி லேயே உயிரை விட்டனர்.

ஒரு தேசிய இனத்தின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை இந்த உலக நாடுகள் தமிழினத்துக்கு வழங்கவில்லை. மாறாக பூர்வீகக் குடிகளை பூண்டோடு அழிக்கத் துணிந்த பேரினவா தத்துக்கு ஆதரவு வழங்கினர். எங்கெல்லாம் நீதி கிடைக்க வழி உண்டோ, அங்கெல்லாம் நின்று கண்ணீர் விட்டு கதறிப் பார்த்தும் எமது இனத்துக்கான நீதி இதுநாள் வரை வழங்கப் படவில்லை. இந்த இனப் படுகொலைகளுக்கு பிறகும் கூட ஒரு பொது வாக்கெடுப் பின் மூலம் தமிழீழ மண்ணில் வாழும் உறவுகளுக்கு, வெளி நாடுகளில் நடப்பது போல சுயநிர்ணய உரிமை வழங்கப் படவில்லை என்பதுதான் கவலையளிக்கிறது.-என் றுள்ளது. (ச)

## ஜாதவ் மரண தண்டனை: பாகிஸ்தானுக்கு சர்வதேச நீதிமன்றம் தடை!

குல்பூஷண் ஜாதவ் மரண தண்டனையை நிறைவேற்ற பாகிஸ்தானுக்கு சர்வதேச நீதி மன்றம் தடை விதித்து நேற்று வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

சர்வதேச நீதிமன்றத்தில் 11 நீதிபதிகள் கொண்ட குழு மேற்படி தீர்ப்பை வழங்கி யது.பாகிஸ்தான்விதித்த மரண தண்டனையை எதிர்த்து நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத் தில் மத்திய அரசு மனுத் தாக் கல் செய்தது.இந்நிலையில், மறு உத்தரவு வரும் வரை தண்டனையை நிறைவேற்றத் தடை பிறப்பித்துள்ளது சர்வ தேச நீதிமன்று.

இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரி குல்புஷன் ஜாதவ், பாகிஸ்தானை உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட் டில் அந்நாட்டு பொலிஸா ரால் கைதுசெய்யப்படிருந் தார். அவருக்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)



முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடற்கரையில் நேற்று வியாழக்கிழமை பொது மக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்துகின்றமையைப் படத்தில் காணலாம். (ச)

## தினகரனின் பிணை மனு விசாரணை ஜூன் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

அதிமுக துணை பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணையை எதிர் வரும் ஜூன் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து டில்லி நீதி மன் றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்ன விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள டி.டி.வி. தினகரன் பிணை அனுமதி கோரி டில்லி மாவட்ட நீதிமன் றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்நிலை யிலேயே மேற்படி மனு விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இந்த மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப் பட்டது.

இரட்டை இலைச்சின் னத்தை பெற்றுக்கொள்வதற் காக தேர்தல் ஆணையகத் துக்கு லஞ்சம் கொடுக்க முயன் றார் என்ற குற்றச்சாட்டில் பெங்களூரைச் சேர்ந்த இடைத் தரகர் சுகேஷ் சந்திரசேகர் என்பவர் கைது செய்யப்பட் டார்.

அவர் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் டி.டி.வி.தினகரன் டில்லி பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவரிடம் தொடர்விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### இரட்டை இலை விவகாரம்: மேலும் ஒருவர் சிக்கினார்!

இரட்டை இலைச் சின் னத்தை பெற்றுக்கொள்வ தற்காக லஞ்சம் கொடுத்த வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியா கியுள்ளன.

டி.டி.வி தினகரனுக்குப் பிணை அனுமதி கோரி தாக்கல் செய்த மனு நேற்று வியாழக்கிழமை விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இதன்போது இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய மேலும் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார் என டில்லி பொலிஸார் தரப்பில் ஆஜ ரான வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கைதுசெய் யப்பட்ட பாபு பரத் என்பவரை இரண்டு நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டப் பட்டுள்ளது. (ச)

## மத்திய அமைச்சர் அனில் காலமானார்: பிரதமர் மோடி இரங்கல் தெரிவிப்பு!

மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அனில் மாதவ் தவே நேற்று வியாழக்கிழமை காலமானார்.

மத்தியப் பிரதேச மாநிலம் உஜ்ஜைனியைச் சேர்ந்த அனில் மாதவ் தவே மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் ஆவார்.

மத்திய பிரதேச மாநிலத் தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், கடந்த ஆண்டு சுற்றுச் சூழல் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுச் சிறப்பாக பணியாற்றினார்.

இந்நிலையில், அனில் மாதவ் தவே திடீர் உடல் நலக்குறைவு காரணமாகத் தனது 60 ஆவது வயதில் உயிரிழந்தார்.

அவரது மறைவுக்குப் பிரத மர் மோடி உட்பட பல அரசி யல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மத்திய அமைச்சர் அனில் மாதவ் தவே மறைவு தொடர் பில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்கையில்-



''மிகவும் மதிப்புக்குரிய ஒருவரான அனில் மாதவ் தவே திடீரென காலமானார் என்ற செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன். அனில் மாதவ் தவே ஓர் அர்ப்பணிக் கப்பட்ட பொது ஊழியராக நினைவில் இருப்பார். அவர் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அவருடைய மறைவு எனக்குத் தனிப்பட்ட இழப்பாகும்'' எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.

அவருடைய திடீர் மறைவு பிரதமர் மோடி, அவருடைய அமைச்சரவை சகாக்கள் மற் றும் பா.ஜ.க., பிற அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகி யோருக்குப் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தாயைச் சந்திக்க அனுமதி கோரிய முருகனின் மனு ஒத்திவைப்பு!



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் உள்ள ஆயுள் தண் டனைக் கைதி முருகன், தனது தாயாரைச் சந்திக்க அனுமதி கேட்டு தாக்கல் செய்த மனுவைச் சென்னை உயர்நீதி மன்றம் ஒத்திவைத்து உத்தர விட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, கடந்த 26 வருடங்களாக வேலூர் சிறையில் ஆயுள் தண்டனைக் கைதியாக உள்ள முருகனை, இலங்கையில் உள்ள வயதான அவரது தாயார் சந்திக்கும் பொருட்டு தற்பொழுது சென்னை வந்து தங்கியுள்ளார். அவரது விசா காலம் இந்த மாத இறுதியில் காலாவதியாக உள்ளமையால், அவரைச் சந்திப்பதற்கு இம்மாதம் 22 முதல் 27 ஆம் திகதிவரை ஏதேனுமொரு நாளை ஒதுக் குமாறு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் முருகன் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் அவரது மனுவை ஏற்றுக் கொள்ள மறுத்த நீதி மன்றம், முருகனது மனுவை கோடை விடுமுறைக்கு பின்பு ஒத்தி வைத்து உத்தரவிட்டது.


வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள முரு கனிடம் இருந்து அண்மை யில், 2 கைபேசிகள், சிம் அட் டைகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன. சிறை விதி களின்படி தடை செய்யப்பட்ட பொருளை முருகன் பயன் படுத்திய குற்றச்சாட்டின் அடிப் படையில், அவரைப் பார்வை யாளர்கள் யாரும் சந்திப்பது தற்காலிகமாக தடை செய்யப் பட்டுள்ளது.

வேலூர் பெண்கள் சிறை யில் உள்ள அவரது மனைவி நளினியை 15 நாள்களுக்கு ஒரு முறை அனுமணித்தி யாலம் சந்தித்துப் பேச அளிக் கப்பட்டிருந்த அனுமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வேலூர் மத் திய சிறைக்கு முருகனின் தாயார் சோமனி அண்மையில் வந்தார். முருகனைச் சந்திக்க அனுமதி அளிக்குமாறு மனு அளித்தார். இதை பரிசீலனை செய்த சிறை நிர்வாகம் அவ ரது மனுவை ரத்து செய்தது. இதையடுத்து, சாந்தனை மட்டும் அவர் சந்தித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அமெ.ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யத் தலையீடு: விசாரணை நடத்த விசேட சட்ட ஆலோசகர்

வொஷிங்டன், மே 19

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான விசேட சட்ட ஆலோசகராக, அமெரிக்க புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் றொபர்ட் முல்லர் நியமிக்கப் பட்டுள்ளார்.



கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது இடம் பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டு வந்த நிலையில், அமெரிக்க நீதித்துறையால் இந்த நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

பொது நலன் கருதி வெளிநபர் ஒருவர் நிய மிக்கப்படுள்ளார் என அமெரிக்க நீதித்துறை குறிப்பிட்டிருக்கிறது. முல்லரின் இந்த நியமனம் இருதரப்பை சேர்ந்த அரசியல்வாதிகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் விசாரணை நடத்திவந்த அமெரிக்க புல னாய்வுத் துறையின் தலைவர் ஜேம்ஸ் கோமி பதவிநீக்கம் செய்யப்பட்டமையை அடுத்தே, விசாரணைகளை முன்னெடுக்கக் கோரி அழுத்தம் வலுத்தது.

2016 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு காணப்பட்டதாக அமெரிக்க புலனாய்வுத் துறையினர் குறிப்பிட்டிருந்தபோதிலும், அந்தக் குற்றச் சாட்டை ரஷ்யா நிராகரித்திருந்தது.

அதேவேளை, ரஷ்யா வுடன் எவ்வித இணக்கப் பாடும் இல்லை என்று ட்ரம்ப் தரப்பும் மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேல்ஸ் நாட்டு முன்னாள் முதலமைச்சர் காலமானார்



ஒரு தசாப்த காலமாக முதலமைச்சராக சேவை யாற்றிவந்த, வேல்ஸ் நாட்டின் முன்னாள் முதல மைச்சர் றொட்றி மோர்கன் தனது 77ஆவது வயதில் நேற்று முன்தினம் கால மானார்.

இந்நிலையில், வேல்ஸ் நாட்டின் அதிகாரத்துவத்தின் தந்தையை மக்கள் இழந்துள்ளதாக வேல்ஸ் முதலமைச்சர் கோர்னி ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு வேல்ஸ் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். 2009ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியில் மக்களுக்காகப் பெரும் பணியாற்றினார்.

# அமெரிக்க உச்சிமாநாட்டுக்கு தயாராகும் தென்கொரியா!

### வடகொரிய விவகாரம் தொடர்பில்

சியோல், மே 19

வடகொரியாவின் ஆயுத வளர்ச்சியைச் சமாளிக்கும் வகையில் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் அமெரிக்காவுடன் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தென்கொரிய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.



இதுதொடர்பில் தென்கொரிய வெளி விவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் நேற்று வெளியிட்ட தகவலில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உச்சிமாநாடு சந்திப்புடன் இணைந்து வடகொரிய அணுசக்திப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உறுதியான மற்றும் நடைமுறைத் திட்டங்களை கண்டுபிடிப்பதில் தென்கொரியாவும் அமெரிக்காவும் நெருக்கமான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றன.-என்றார்.

சர்வதேச நாடுகளுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாக விளங்கும் வட கொரியா ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களையும் மீறி கடந்தஞாயிற்றுக்கிழமை ஏவுகணை சோதனையை நடத்தியிருந்தது. இதன் மூலம் கனரக அணுஆயுத தாக்குதல்களை மேற்கொள்வதற்கான தனது திறனை வடகொரியா பரிசோதித்துக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க இரகசிய ஆவணங்களை வெளியிட்டவர் விடுதலையானார்!

வொஷிங்டன், மே 19

அமெரிக்க இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு வழங்கிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட செல்ஸீ மேன்னிங் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



அமெரிக்க இராணுவத்தில் அவர் பணியாற்றிய போது 7 கோடி 50 லட்சம் இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு வழங்கியிருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணைகளின் பின்னர் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டமையையடுத்து 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனையடுத்து செல்ஸீ மேன்னிங் சிறையில் இருந்து வந்த நிலையில், அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா இவரது தண்டனையை ஏழு ஆண்டுகளாகக் குறைத்திருந்தார்.

இந்த நிலையில் ஏழு ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் செல்ஸீ மேன்னிங் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்படுள்ளார்.

## தொலைக்காட்சி வளாகம் மீதான தாக்குதல்; 10 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் தொலைக் காட்சி வளாகத்தில் இடம் பெற்ற தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை பத்தாக உயர்வடைந்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 4 பேரும் தொலைக்காட்சி பணியாளர்கள் நான்கு பேரும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

தொலைக்காட்சி வளாகத்துக்குள் நுழைந்த ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்கொலைத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி வளாகம் அமைந்துள்ள பகுதி தலிபான் தீவிரவாதிகள் செறிந்துள்ள பகுதி என்றபோதிலும் இந்தத் தாக்குதலை ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# நாயின் பாசப்போராட்டம்

ஆர்ஜென்டினாவில் மரத்தில் இருந்து விழுந்து அடிபட்ட தனது எஜமானை, அவர் வளர்த்த நாய் கட்டிப் பிடித்து பாசத்தை வெளிப்படுத்திய செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



ஆர்ஜென்டினாவின் பாஹியாப்லாங்காபகுதியைச் சேர்ந்த இயேசு ஹியூசே என்பவர் தன் வீட்டின் வெளியே இருந்த மரத்தை சுத்தம் செய்வதற்காக, மரத்தின் மீது ஏறி கிளைகளை வெட்டியுள்ளார்.

அப்போது அவர் மரத்தில் ஏறி நின்று கொண்டிருந்தபோது கிளை திடீரென்று முறிந்ததால், கீழே விழுந்து விட்டார். இதைக் கண்ட அருகில் இருந்தவர்கள் உடனடியாக மருத்துவ மனைக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

உடனடியாக அம்புலன்ஸில் வந்த பணியாளர்கள் அவர்கள் அடிபட்ட இயேசு ஹியூசேயின் கழுத்தில் கழுத்துச் சங்கில் போட்டுள்ளனர். அதன்பின் அவர்கள் அம்புலன்ஸில் ஏற்றிச் செல்வதற்காக இயேசு ஹியூசேவை தூக்கிய போது, அவர் வளர்த்து வந்த செல்ல நாய் டோனி அவர்களை தூக்கவிடாமல் சிறிது நேரம் எஜமானரைப் பார்த்தபடி நெஞ்சில் ஏறி கட்டிப் பிடித்துக் கொண்டது.

யாரையும் தூக்கவிடாமல் கத்தியுள்ளது, அதன் பின் எஜமானர் கூறிய பின்னரே டோனி அவர்களை தூக்கிச் செல்ல அனுமதி அளித்துள்ளது.

மருத்துவமனைக்கு கொண்டு சென்ற அவர் தற்போது ஆரோக்கியத்துடன் இருக்கின்றார். அவருக்கு சிறிய காயம் தான் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரானில் இன்று ஜனாதிபதித் தேர்தல்

ஈரானில் ஜனாதிபதித் தேர்தல் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த நிலையில் தலைநகர் தெஹ்ரானில் நேற்று முன்தினம் இறுதிக்கட்ட பிரசாரங்கள் மும்முரமாக இடம் பெற்றிருந்தன.

ஜனாதிபதித் தேர்தலில் ஈரானின் தற்போதைய ஜனாதிபதி ரௌகானி மற்றும் கடும் போக்கு இஸ்லாமிய மதகுருவான இப்ரா ஹிம் ரைசி ஆகியோருக்கு இடையில் பலத்த போட்டி நிலவுகின்றது.

ஈரானின் சர்வதேச தனிமைப்படுத்தலை குறைத்தல், மக்களுக்கு அதிக சுதந்திரங்களை வழங்குதல் போன்ற உறுதி மொழிகளுடன் கடந்த நான்குஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரௌஹானி மூன்று மடங்கு அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றிருந்தார்.

இந்நிலையில் இம்முறை தேர்தலில் மீண்டும் போட்டியிடும் ரௌகானி, ஈரானுக்கு வெளிநாட்டு உதவிகள் தேவையில்லை. 1979 ஆம் ஆண்டு இஸ் லாமியப் புரட்சியின் மறுமலர்ச்சியை மறுபரிசீலனை செய்வதாக உறுதியளித்துள்ளார்.

# சம்பியன்ஸ் கிண்ணத்தை வெல்லும் கனவுடன் இங்கிலாந்துக்குப் புறப்பட்டது இலங்கை அணி!



கொழும்பு, மே 19

2017ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்தில் விளையாடவிருக்கும் இலங்கை தேசிய அணி நேற்று வியாழக்கிழமை காலை சம்பியன்ஸ் கிண்ணத்தை வெல்லும் கனவுகளுடன் இங்கிலாந்து சென்றுள்ளது.

இதற்கு முன்னதாக, தேசிய அணியை உத்தியோகபூர்வமாகப் படம் எடுக்கும் நிகழ்வும், இறுதி ஊடகவியலாளர் சந்திப்பும் கொழும்பு மொவென்பிக் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தன.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்தியூஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

கடுமையான முயற்சிகளுடன் அமைந்த சிறந்த மதிப்பீடுகளின் பின்னர் தேர்வு செய்யப்பட்ட திறமைவாய்ந்த அணி இம்முறை எனக்கு தரப்பட்டிருக்கின்றது. மேலும் 15 நாள்கள் கடும் உழைப்புடன் கூடிய பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றோம். இதனால், நாங்கள் (சம்பியன்ஸ் கிண்ணத்திற்காக) எதிர்பார்த்த ஆயத்தத்தை விட அதிக ஆயத்தத்தில் உள்ளோம் என நம்புகின்றேன். இப்போது நாங்கள் அங்கு சென்று எங்களது விளையாட்டைக் காட்ட வேண்டியது மட்டுமே மிகுதியாக உள்ளது. (சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு முன்னதாக) இங்கிலாந்தில் 'போனஸாக' எமக்கு கிடைத்திருக்கும் மேலதிக ஒரு வாரத்தில் விளையாடவுள்ள இரண்டு பயிற்சிப் போட்டிகள் எமது அணிக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றன. - என்று தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத்துக்காக வேண்டி இலங்கை அணிக்கு புதிதாக கண்டியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் செயற்றிறன் மிக்க பயிற்சி மையத்தில் இலங்கை அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் கிரகம் போர்ட் தலைமையின் கீழ் சிறப்பான முறையில் பயிற்சி வழங்கப்பட்டிருக்கின்றது.

மும்பை இந்தியன்ஸ் அணிக்காக தற்போது இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் விளையாடிக் கொண்டிருக்கும் லசித் மலிங்க இந்தியாவில் தனது பங்களிப்பு முடிவடைந்தவுடன் இங்கிலாந்து பயணமாகி இலங்கை அணியுடன் இணையவிருக்கிறார்.

இலங்கை அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் கிரகம் போர்ட் இங்கிலாந்து நாட்டின் மைதானங்கள் பற்றி விவரித்தவை வருமாறு:-

நாங்கள் ஓவல் மைதானத்தில் எங்களுக்குரிய இரண்டு குழுநிலை போட்டிகளை விளையாடுவது மிகவும் அதிர்ஷ்டமான விடயமாகும்.

ஏனெனில், கோடை காலத்தின் ஆரம்பத்தில் சாதகமாக காணப்படக் கூடிய மைதான நிலைமைகளை சரிவர உபயோகித்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எமக்கு இருக்கின்றமையை என்னால் பார்க்க முடிகிறது.

தொடரில் பெறப்போகும் ஓட்டங்கள் எப்போதும் அதிகமாகவே இருக்கும், அதுவும் எமக்கு பொருந்திப் போகும் ஒன்றாகும்.

ஆனால், இத்தொடரில் (எமது அணி) எந்தளவிற்கு சுழல் பந்துகளை உபயோகப்படுத்த வேண்டி இருக்கின்றது என்பது என்னால் உறுதிப்படுத்த முடியாத ஒன்றாகும்.

ஏனெனில், தென்னாபிரிக்க அணிக்கு இம்ரான் தாஹிரும், இந்திய அணிக்கு ரவிச்சந்திரன் அஸ்வினும் பெரும் பலமாகக் காணப்படுவார்கள். இத் தொடர் மூலம் நாங்கள் ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சிறந்த மைதானங்களையே எதிர்பார்க்கிறோம்.- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அணி இந்த சுற்றுத் தொடரை இம்மாதம் 21 ஆம் மற்றும் 23 ஆம் திகதிகளில் ஸ்கொட்லாந்து அணிக்கெதிராக நடைபெறும் இரண்டு ஒரு நாள் பயிற்சிப் போட்டிகள் மூலம் ஆரம்பிக்கின்றது. அதனை அடுத்து இலங்கை, ஆஸ்திரேலியா (மே 26) மற்றும் நியூஸிலாந்து (மே 30) ஆகிய அணிகளுடன் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் பயிற்சிப் போட்டிகளில் விளையாடுகின்றது.

இதுதொடர்பில் உபாதை காரணமாக பங்களாதேஷ் அணியுடனான ஒரு நாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விளையாடாமல் ஓய்வில் இருந்த நிரோஷன் திக்வெல்ல கருத்துத் தெரிவிக்கையில்-

நான் எனது விரல் உபாதையிலிருந்து 100 சதவீதம் குணமடைந்திருக்கின்றேன். கண்டியில் இடம்பெற்ற பயிற்சி முகாம் மூலம் நான் பெற்றுக்கொண்ட அனுபவம் அணியுடன் ஒருமித்து செயற்பட உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு போட்டியும் எமக்கு மிக முக்கியமானவையாகக் காணப்படுகின்றார். ஏனெனில், இத்தொடரில் எந்தவிதமான தவறையும் நாம் இழைத்து விடும்படி செயற்பட்டு விடக்கூடாது.

தென்னாபிரிக்க அணியுடன் அவர்களது மண்ணில் நாம் அண்மையில் விளையாடியிருந்த தொடர் மூலம் அவ்வணியின் பலம், பலவீனம் என்பவற்றைத் தெரிந்து வைத்துள்ளோம். எனவே, இத்தொடரில் எமது முதல் இலக்கு அவர்களை வீழ்த்துவதே.- என்று தெரிவித்துள்ளார்.

உலகின் முதல் இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்க அணியுடனும், நடப்புச் சம்பியன் இந்திய அணியுடனும் எதிர்பார்த்துக் கூற முடியாத பாகிஸ்தான் அணியுடனும் சம்பியன்ஸ் கிண்ணத்தில் இலங்கை அணி குழு 'பி' இல் மோதுகின்றது.

இலங்கை அணி, 2002 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்த சம்பியன்ஸ் கிண்ணத்தின் இறுதிப்போட்டியில் பலத்த மழை ஏற்பட்டதன் காரணமாக, அவ்வருடத்திற்குரிய கிண்ணத்தை இந்திய அணியுடன் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் உப தலைவர் உபுல் தரங்க கருத்துத் தெரிவிக்கையில்-

இந்தத் தொடர் எனக்கும் எமது அணிக்கும் பெரும் சோதனைகளில் ஒன்றாக அமையவுள்ளது. கடந்த இரு வாரங்களிலும் இத்தொடருக்காகக் கடுமையாகப் பயிற்சி பெற்றிருக்கிறோம். இதன் மூலம், இத்தொடருக்காகச் சிறப்பாகத் தயாராகி இருக்கின்றோம் என எண்ணுகின்றேன்.

இன்னும் நான் இங்கிலாந்தில் கடந்த காலங்களில் சிறப்பாக விளையாடிய பதிவையும் கொண்டிருக்கின்றேன். உலகின் ஏனைய மைதானங்களுடன் ஒப்பிடும் போது, இங்கிலாந்து நாட்டின் மைதானங்கள் பெரிய ஓட்டங்களைக் குவிக்க ஏதுவாக இருக்கின்றன.

எனவே, நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணம் பொறி பறக்கும் தொடர்களில் ஒன்றாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். கிரிக்கெட் 'சியர்லீடர்ஸ்' சம்பளத் தொகை விவரம்!


டில்லி, மே 19

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் நடனமாடும் 'சியர்லீடர்ஸ்' பெண்கள் ஒவ்வொரு போட்டிகளிலும் வாங்கும் சம்பளம் எவ்வளவு என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் சியர்கர்ல்ஸாக நடனம் ஆடுபவர்களுக்கு ஒரு போட்டிக்கு இந்திய ரூபா மதிப்பின் படி 18,000 முதல் 30,000 வரை சம்பளமாக வழங்கப்படுகின்றது. இதுவே அவர்கள் நடனம் ஆடும் அணி வெற்றி பெற்றால் 'போனஸ்' தொகையும் வழங்கப்படுகிறது.

10 ஆவது ஐ.பி.எல். தொடர் இப்போது நடந்து வரும் நிலையில் குறைந்தபட்சம் ஒவ்வோர் அணியும் 14 போட்டிகளில் விளையாடுகின்றன.

அப்படியானால் 14 போட்டிக்கு இந்தச் சியர்கர்ல்ஸ் 4 லட்சம் வரை சம்பளமாகப் பெறுவார்கள். இதுவே கால்



இறுதி, அரை இறுதி மற்றும் இறுதி போட்டிகள் ஆகியவற்றுக்கு அணிகள் செல்லும் போது கூடுதலாகப் பணத்தை அள்ளுவார்கள்.


அதுமட்டுமன்றி ஐ.பி.எல். போட்டிகளில் பங்கு பெறும் அணிகளுடன் நடத்தப்படும் போட்டோ ஷூட்டில் பங்கு பெற்றால் 5,000 முதல் 10,000 ரூபா வரை சம்பளம் வழங்கப்படுமாம்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக நடனம் ஆடுபவர்கள் சம்பளமாக 15,000 ரூபாவும், போனஸ் 4,000 ரூபாவும், கூடுதலாக நடனம் ஆட 12,000 ரூபாவும் சம்பளமாகப் பெறுகின்றனர்.

பெங்களூரு அணி சியர்கர்ல்ஸ் சம்பளமாக 12,000 ரூபாவும், போனஸ் 4,000 ரூபாவும், பார்டி அல்லது நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் போது 12,000 ரூபாவும் பெறுகின்றனர்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்காக நடனமாடுபவர்களுக்கு 8,000 ரூபா முதல் 10,000 ரூபா வரையிலும், போனஸ் 4,000 ரூபாவும் பெறுகின்றனர்.

# அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை தக்கவைத்தது கொல்கத்தா!



பெங்களூர் , மே 19

10 ஆவது ஐ.பி.எல். தொடரின் வெளியேற்று தல் சுற்றுப் போட்டியில் (எலிமினேட்டர்) கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் சின்னச்சாமி பெங்களூர் மைதானத்தில் இடம்பெற்ற லீக் போட்டிகளின் நிறை வில் புள்ளிப் பட்டியலில் 3 ஆவது இடம் பிடித்த ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணியும், 4 ஆவது இடம் பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

கொல்கத்தா அணியில் மனிஷ் பாண்டே காயம் காரணமாக இடம்பெற வில்லை. அத்துடன் குல்தீப் யாதவ் நீக்கப் பட்டார். சூர்யகுமார் யாதவ், நாதன் கவுல்டர் நிலே, பியுஷ் சாவ்லா, இஷாங் ஜக்கி ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்ளப் பட்டனர்.

ஐதராபாத் அணியில் ஹென்ரிக்ஸ், முகமது நபி, முகமது சிராஜ் ஆகியோருக் குப் பதிலாக யுவராஜ் சிங், வில்லியம்சன், கிறிஸ் ஜோர்டான், பிபுல் ஷர்மா ஆகியோர் இடம்பெற்றனர்.

இந்த நிலையில், போட்டி யின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதன்படி, ஐதராபாத் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்க ளாக டேவிட் வோர்னர், ஷிகர் தவான் ஆகியோர் களம் இறங்கினர். இருவ ரும் நிதானமான ஆட் டத்தைக் கடைப்பிடித்தனர்.

அணியின் ஓட்ட எண் ணிக்கை 4.2 ஓவர்களில் 25 ஓட்டங்களாக இருந்த போது ஷிகர் தவான் 11 ஓட்டங்களுடன் (13 பந்து களில் ஒரு பவுண்டரி யுடன்) ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து வில்லியம்சன், டேவிட் வோர்னருடன் இணைந்தார். இருவரும் நிதானமாகவும், நேர்த்தியாகவும் துடுப் பெடுத்தாடினர். இதன் காரணமாக அந்த அணி பவர்பிளேயில் ஒரு விக்கெட் இழப்புக்கு 30 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்நிலையில், அணியின் ஓட்ட எண்ணிக்கை 12 ஓவர்களில் 75 ஓட்டங் களை எட்டுகையில், வில்லியம்சன் 24 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரில் டேவிட் வோர்னர் 37 ஓட்டங்களைப் பெற்று பியுஷ் சாவ்லாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

முன்னதாக டேவிட் வோர்னர் 23 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஐ.பி. எல். போட்டி வரலாற்றில் 4 ஆயிரம் ஓட்டங்களை (114 ஆவது ஆட்டத்தில்) கடந்த 5 ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

ஏற்கனவே சுரேஷ் ரெய்னா (சென்னை, குஜராத்), விராட் கோஹ்லி (பெங்களூர்), ரோகித் சர்மா (டெக்கான், மும்பை), கம்பீர் (டில்லி, கொல் கத்தா) ஆகியோர் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள் ளனர்.

அத்துடன், ஐ.பி.எல். வரலாற்றில் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வெளிநாட்டு வீரர் என்ற சாதனையையும் இவர் படைத்துள்ளார். முதல் இன்னிங்ஸ் நிறைவில் நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்கள் நிறை வில் ஐதராபாத் அணி 7 விக் கெட்டுகள் இழப்புக்கு 128 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

கொல்கத்தா அணி சார் பில் நாதன் கவுல்டர் நிலே 3 விக்கெட்டுக்களையும், உமேஷ் யாதவ் 2 விக்கெட் டுக்களையும், டிரென்ட் பவுல்ட், பியுஷ் சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி யிருந்தனர்.

இந்த நிலையில், ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணி துடுப்பாட்டத்தை நிறைவு செய்த நேரத்தில் மழை குறுக்கிட் டது. இதனால் சுமார் 3 மணி நேரம் போட்டி பாதிக் கப்பட்டது.

மைதானத்தின் தன்மை யையும், மழையையும் கருத்தில் கொண்டு, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 6 ஓவர்களில் 48 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என அறிவிக்கப் பட்டது.

இதன்படி, துடுப்பெடுத் தாடக் களம் இறங்கிய அந்த அணி 5.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 48 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றுள்ளது. வெளியேற் றல் சுற்றில் வெற்றி பெற்ற தையடுத்து கொல்கத்தா அணி இரண்டாவது தெரிவுப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் மோதவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணி எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் புனே அணியுடன் களம் காணும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொல்கத்தா அணியின் வெற்றி குறித்து அந்த அணி தலைவர் கம்பீர் தெரிவித்தவை வருமாறு:-

பந்து வீச்சாளர்களின் பணி மிகவும் சிறப்பாக இருந்தது. 128 ஓட்டங் களுக்குள் ஐதராபாத் அணியை கட்டுப்படுத் தியது அற்புதமானது. பந்துவீச்சாளர் களுக்குத் தான் பாராட்டு எல்லாம் சேரும். நம்ப முடியாத வகையில் மிகவும் அபார மாக வீசினர். இதனால், ஆட்டத்தை எங்கள் பக்கம் கொண்டு வர முடிந்தது.

இந்த ஆடுகளத்தில் துடுப்பாட்டம் சவாலாக இருந்தது. 160 ஓட்டங்கள் குவித்து இருந்தால் சிறந்த ஓட்டப் பெறுதியாக இருந் திருக்கும். சிறிய இலக்கில் 3 விக்கெட்டுகள் போனமை சிறிய ஏமாற்றம். ஆனாலும் பொறுப்புடன் ஆடி இருக் கிறோம்.

கடந்த ஐ.பி.எல்.. போட்டி யில் 'எலிமினேட்டரில்' நாங்கள் ஐதராபாத்திடம் தோற்றோம். இதற்கு தற் போது பதிலடி கொடுத்து வெளியேற்றி இருக்கி றோம். மும்பை இந்தியன் ஸுடன் இதே ஆடுகளத்தில் 'குவாலிபையர் 2' ஆட்டத் தில் இன்று சந்திக்கிறோம். அந்த அணிக்கு எதிராக எங்களது சாதனைகள் சிறப் பாக அமையவில்லை. ஆனாலும், மும்பைக்கு எதிராக நன்றாக விளையா டுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரெஞ் பகிரங்க டெனிஸ்; ஷரபோவா அனுமதி மறுப்பு!



பாரிஸ், மே 19

பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் இரண்டு தடவைகள் சம்பியனான மரியா ஷரபோவாவுக்கும் இந்த வருடம் பங்குபற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள் ளது.

மரியா ஷரபோவாவுக்கு குருட்டு வாய்ப்பு சீட்டு (வைல்ட் கார்ட்) வழங்க போட்டி ஏற்பாட்டாளர்கள் மறுத்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து பாவனையில் சிக்கி யமையை அடுத்து விதிக் கப்பட்ட 15 மாதத் தடை யின் பின்னர் மரியா ஷர போவா மூன்று டென்னிஸ் போட்டிகளில் விளை யாடியுள்ளார்.

எனினும், மாபெரும் டென்னிஸ் (க்ராண்ட் ஸ்லாம்) போட்டிகளில் ஒன் றான பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அவருக்கு அனுமதி வழங்கப்பட வில்லை.

இதுதொடர்பில், பிரெஞ்சு டென்னிஸ் சம்மேளனத் தலைவர் பேர்னார்ட் தெரிவித்தவை வருமாறு:-

''உபாதையால் பீடிக் கப்பட்டு மீண்டும் விளை யாட வரும் ஒருவருக்கு குருட்டு வாய்ப்பு சீட்டு வழங்கலாம்.

ஆனால், ஊக்கமருந்து பாவனையில் சிக்கியமைக் காகத் தடைக்குட்பட்டு மீள்வருகை தரும் ஒருவருக்கு குருட்டு வாய்ப்பு சீட்டு வழங்க முடியாது.

இதனால், அவர் (ஷரபோவா) ஏமாற்றம் அடைந்திருக்கலாம். ஆனால், போட்டியின் மகத்துவத்தையும் சந்தேகத் தைத் தோற்றுவிக்காத முடிவுகளைத் தரும் விளை யாட்டையும் காப்பாற்ற வேண்டியமை எனது பொறுப்பாகும்'' .- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் போட்டியில் விளையாட அனுமதிக்கப் படவில்லை என்பதை அறிந்த சொற்பநேரத்தில், உபாதையைக் காரணம் காட்டி இத்தாலி பகிரங்க போட்டிகளின் இரண்டாம் சுற்றின் மூன்றாவது செட் டில் முன்னிலையில் இருக் கையில் மரியா ஷரபோவா விலகிக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பில் மரியா ஷரபோவா தெரிவிக்கையில்-

''எனது இடது கால் தசைப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக நான் விலகிக்கொள்கின்றமையை யிட்டு மன்னிப்புக் கோரு கின்றேன். இந்த உபாதை பாரதூரமானதா இல்லையா என்பது குறித்து மருத்துவ சிகிச்சைக்குள்ளாவேன்'' என்று தெரிவித்தார்.

# சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்: ஆஸி. அணியில் மார்கஸ் ஸ்டோனிஸ்!



மெல்போர்ன், மே 19

தோள்பட்டை காயம் குணமடைந்து உடல் தகுதியை எட்டி இருக்கும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 27 வயதான சகல துறை வீரர் மார்கஸ் ஸ்டோனிஸ் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் விளையாடு வார் என்று தெரிவிக்கப் படுகிறது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த மார்கஸ் ஸ்டோனிஸ் ஒப்பந் தம் செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் போட்டித் தொட ரின் போது தோள்பட்டை யில் காயம் அடைந்த அவர் சிகிச்சைக்காக நாடு திரும் பினார்.

இதனால், இங்கிலாந்தில் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடங்கும் சம்பி யன்ஸ் கோப்பை போட்டிக் கான ஆஸ்திரேலிய அணியில் மார்கஸ் ஸ்டோனிஸ் நீடிப்பாரா என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த நிலையில், மார்கஸ் ஸ்டோனிஸ் காயம் குணம டைந்து உடல் தகுதியை எட்டி இருக்கிறார். அவர் நேற்று முன்தினம் பந்து வீச்சுப் பயிற்சியில் ஈடுபட் டார். எனவே, அவர் சம்பி யன்ஸ் கிண்ணப் போட்டி யில் விளையாடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர்



## இனவழிப்பே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை தொடர்ந்து மூன்றாவது முறையாக நடத்தும் முள்ளி வாய்க் கால் நினைவேந்தல் சோக நாள் இன்று. 2009 ஆம் ஆண்டில் இறுதி யுத்தத்தின் போது போராளிகள் சிலரையும் அப்பாவி மக் கள் பலரையும் பாகுபாடின்றி கொன்றொழித்த ஒரு துயர நாளின் நினைவு நாளே இன்று. இந்நாள் எமது இலங்கை வாழ் தமிழ்மக்கள் வாழ்விலும் புலம் பெயர் தமிழ் மக்கள் வாழ்விலும் ஒரு மறக்க முடியாத துயரம் தோய்ந்த துன்பியல் நாள். இந் நாள் தொடர்ந்து எம் மக்களி டையே ஒரு துக்க நாளாக அனுஷ்டிக்கபபட வேண்டும். எமது துயரத்தை, வேதனையை பிரதிபலிக்கும் இந்நாள், அதேநேரம் எமது ஒற்றுமையையும் ஒருமித்த எதிர்பார்ப்புக்களையும் உலகறிய உதவும் நாளாகவும் பரிணமிக்க வேண்டும். எமது உறவுகளின் அநியாய இன அழிப்பே எமது இனத்தின் ஒற்றுமைக்கான வித்தாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும் ஒன்றுபடவேண்டும் என்ற கருத்தை நான் அண்மைக்காலங்களில் வலியுறுத்தி வருகின்றேன்.

### பொது அடையாளம்

எமக்குள் கட்சி பேதம் உண்டு; வர்க்க பேதம் உண்டு; சாதிபேதம் உண்டு; சமய பேதம் உண்டு;இன்னும் பல முரண்பாடுகள் உணடு. ஆனாலும், நாம் யாவரும் தமிழ்மொழியைப் பேசுகின்றவர்கள் அல்லது அதைப் பேசியவர்கள் வழி வந்தவர்கள் என்ற பொதுவான அடையாளம் எமக்குண்டு.

உள் நாட்டிலும் புலம் கடந்தும்நாம்பிரிபட்டுநிற்கின்றோம். ஆனாலும், எம்மை எல்லாம் ஒற்றுமைப்படுத்தக் கூடிய ஒரு நிகழ்வு இந்த நினைவேந்தல் நிகழவே என்பது எனது கருத்து. ஏனென்றால், அநியாயமாகக் காரணமின்றி அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட நாள் இது.

அவர்கள் எல்லோரும் போராளிகள் என்று பிதற்றுவோரும்உண்டு. அவர்களுக்கு எமது அனுதாபங்கள். கைக் குழந்தைகளும், வலுவிழந்த வயோதிபர்களும் 'போராளிகளே' என்று கூற இவர்களுக்கு எப்படி மனம் வந்ததோ!

சமய ரீதியான சம்பவங்கள் உண்டு. அவை மதம் சார்ந்தவை. சமூகரீதியானசிலபண்டிகைகள் உண்டு. அவை யாவரையும் உள்ளடக்கமாட்டா. ஆனால்எமதுமக்களின்உறவுகள் அநியாயமாக உயிர் நீத்த இந்த நாள் எம்மெல்லோர் நினைவிலும் என்றென்றும் இருக்க வேண்டிய சோக நாள்.

எமது சிந்தையில் கரும் புள்ளியொன்றைஇட்டுச்சென்ற இந்த நாள், எம் எல்லோர் மனதையும் உலுக்கிய இந்நாள், சோகம் தந்த இந்நாள், எம் எல்லோரையுஞ் சேர்க்கும் நாளாக அமைய வேண்டும். எமது வேதனைகளின் அடிப்படையில் எமதுபரந்துவாழும்தமிழ்ச்சமூகம் தமிழ் மொழி பேசும் சமூகங்கள் ஒன்றுபடவேண்டும்.

### 2015 நினைவேந்தல்

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நாட்டின் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டதும், புதிய உற்சாகமும், உத்வேகமும் எமது மக்கள் மனதில் ஏற்பட்டது. காரணம் அவரின் தேர்வுக்கு நாமும் ஒரு முக்கிய காரணமாகவிருந்தோம்.

எனவே, அவ்வருடத்தைத் தொடர்ந்து வந்த மே மாதம் 18ஆம் திகதி முன்னையவருட அந்நாள் போலல்லாது அவ்வருடம்எம்மவர்எல்லோரையுஞ் சேர்த்து முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலில்ஈடுபடவைக்க வேண்டும் என்ற கருத்து எம்முள் மேலோங்கியது. அதற்கானபூர்வாங்கநடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நினைவேந்தல் நிகழ்வுக்கு முதல் நாள் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங் கவைத் தொலைபேசியில்நான்தொடர்பு கொண்டேன்.

"நாளை நான் இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உள்ளேன். உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை உண்டா?"– எனக் கேட்டேன். "உண்டு" – என்றார். "ஏனென்றால் முல்லைத்தீவுநீதிமன்றம் கூட்டங்களுக்குத் தடை விதித்துள்ளது."– என்றார். "கூட்டங்களுக்கு அல்லவே" – என்றேன்.

தன்னிடம் நீதிமன்றக் கட்டளை இருப்பதாக கூறினார். என்னிடமும் இருப்பதாகக் கூறினேன். ஆராய்ச்சி செய்தபோது 'பெலபாளி'என்றபேரணிக்கான சிங்களச் சொல்லுக்குப் பதில் 'ரஸ்வீம்' என்ற கூட்டங்களைக் குறிக்கும் சொல் பிழையாக மொழிபெயர்ப்பில் இடம்பெற்றமை தெரியவந்தது. ஜயசிங்க இதைத்தெரிந்துகொண்டபோது எமது பிரார்த்தனைக் கூட்டத்திற்குத் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றார்.

அவ்வாறுதான் வடமாகாணத்தின் முதல் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. சுமார் 1500 பொலிஸார் முல்லைத் தீவில் எம்முடன் முரண்பட ஆயத்தமாக்கப்பட்டு, கொண்டு வந்து குவிக்கப்பட்டும் சிரேஷ்ட பொலிஸ்மாஅதிபரின்கட்டளை எம்மை அவர்கள் வழிவிட அடி சமைத்தது.

ஒரு சொல்லின் சரியான மொழி பெயர்ப்பில் இருந்தே அந்த முதல் நினைவேந்தல் நிகழ்ச்சி பிரச்சினை இன்றி நடைபெற்றது. சென்ற வருடம் முள்ளிவாய்க்கால் சூழலில் மட்டும் பொலிஸார் நின்றார்கள். வழிநெடுகப் பொலிஸாரைக் கொண்டுவந்துகுவிக்கவில்லை. ஆகவே, உயிர்நீத்தோருக்கான எமது பிரார்த்தனை நிகழ்வு தற்போது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே நான் காண்கின்றேன்.

### நம்மை இணைக்கும் வருடாந்த நிகழ்வு

எனவே, இந்த நிகழ்வு வருடந்தோறும்எமதுமக்களைஒன்றிணைக்கும் ஒரு நிகழ்வாக மாறவேண்டும். அஹிம்சை முறையில் எமது எண்ணப்பாட்டைத் தெரிவிக்கும் ஒரு நாளாக மாறவேண்டும்.

அந்தவகையில்எமதுவருத்தம் தெரிவிக்கும் ஏகோபித்த எண்ணக் கிடக்கைகளை வெளிப்படுத்தும் ஒரு நாளாகவும் இந் நாளை அடையாளம் காண்பதில் ஒரு பிழையும் இல்லை என்று கருதுகின்றேன்.

### அமைதியான போராட்டங்கள்

இன்றுஎம்மக்கள்ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைதியான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். காணிகளைத் திருப்பித்தாருங்கள்என்கின்றார்கள். காணாதவர்களின் கதி என்னவென்று உரக்கக் கேட்கின்றார்கள். சிறையில் வாடும் அரசியல் கைதிகளைப் பொது மன்னிப்பில் விடுவிக்கக் கோருகின்றார்கள். வேலையற்றவர்கள் வேலைகோரி நிற்கின்றார்கள். மீனவர்கள், கடற்படையினரின்காரியங்கள்பற்றிக்காரசாரமாய்க் கதைக்கின்றார்கள். இவற்றிற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று பார்த்தால் போர் முடிந்து எட்டு வருடங்களுக்குப் பின்னரும் எந்தவித அரசியல் ரீதியான வன்முறைகள் தலைதூக்காத நிலையிலும் ஒன்றரை லட்சத்துக்கும் மேலான படையினர் வடமாகாணத்தில் குவித்துவைக்கப்பட்டுள்ளனர்.

### ஏன் இவ்வளவு படையினர்?

அண்மையில் இந்த இடத்திற்கு பிரார்த்தனைக்காக வந்த கனடாவின் ஒன்டாரியோ மாநிலத்தின் நகர பிதா John Tory தான் செல்லும் வழியில் இருக்கும் ஒவ்வொரு இராணுவ முகாமையும் அடையாளப் படுத்திச்சென்றார். போருக்குப் பின் ஏன் இத்தனை படை முகாம்கள் என்று இங்கும் கேட்டார்; கனடாவிலும் கேட்டார். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய காலம் இப்பொழுது கனிந்துள்ளது.

போரின் போது அல்லது போர் முடிவின் போது இழைக்கப்பட்ட மனித உரிமைகளுக்கு மாறான போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் படையினர். போர் முடிந்து நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தப்போகின்றோம் என்று கூறும் அரசாங்கம் தொடர்ந்து படைவீரர்களை இங்கு நிறுத்தி வைத்திருப்பதன் காரணம் என்ன?

அண்மையில் நாம் பழைய வடமாகாண இராணுவத் தளபதியிடம் இந்த எட்டுவருடங்களில் அரசியல் ரீதியான முறையில் எமது மக்கள் ஏதாவது வன்முறைகளில்ஈடுபட்டுள்ளார்கள் என்று உங்களுக்கு அறியவந்துள்ளதா என்று கேட்டோம். "இல்லை! ஆனால், பிரான்ஸிலும் நோர்வேயிலும் இருந்து வந்த தொலைபேசி அழைப்புக்கள் ஊடாகப் புலிகள் இன்னமும் சுறுசுறுப்பாக உள்ளார்கள் என்று தெரியவந்துள்ளது." – என்றார். "அந்தத் தொலைபேசிப் பரிமாற்றங்க தான் உங்களை இங்கு தொடர்ந்து வைத்துள்ளதா?" – என்று கேட்டோம். "ஏதேனும் வருமெனில் அவற்றைத் தடுக்க நாம் இங்கிருக்க வேண்டும்." – என்றார். "இத்தனை ஆயிரம் போர் வீரர்கள் அதற்காகவா இங்கிருக்கின்றார்கள்?" – எனக் கேட்டதற்கு "ஆம்" – என்றார்.

இன்றுபோர்முறைகள்மாற்றமடைந்துள்ளன. ஓர் அறைக்குள் இருந்துகொண்டே வடமாகாணம் பூராகவும் என்ன நடக்கின்றதென்பதை நவீனத் தொழில்நுட்ப அறிவைக் கொண்டுஅறிந்துகொள்ளமுடியும். அதற்காக எமது காணிகளைச் சுவீகரித்து, வீடுகளைக் கையகப்படுத்தி, தொழில்களைத் தம்வசப்படுத்தி, எமது நீர்நிலைகளைக் கைப்பற்றி, வெளிமாகாண மீனவர்களை வருந்தியழைத்து, எம்மக்களின் வாழ்வாதாரங்களை முடக்கச் செய்து, எம்பாதிக்கப்பட்டபெண்களின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கி, வருந்தியழைத்து வெளிமாகாண மக்களை எம் மாகாணங்களில் குடியிருத்தி, பௌத்தர்கள் இல்லாத இடங்களில்புத்தஉருவச்சிலைகளை உருவமைக்கஉதவிசெய்துவர வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது.

### படைக்கு இங்கு என்ன வேலை?

'இராணுவமே வெளியேறு!', 'கடற்படையே வெளியேறு!', 'வான்படையினரே வெளியேறுங்கள்!' என்று எம்மக்கள் சேர்ந்துகுரலெழுப்பும்நன்நாள் வெகு தூரத்தில் இல்லை என்று எண்ணுகின்றேன்.காரணமின்றி காழ்ப்புணர்ச்சியுடன் இங்கு அவர்கள் காலங்கடத்து வதைக் காரசாரமாக விவாதிக் கப்போகும்நாள்தொலைவில்இல்லை என்று நான் நம்புகின்றேன்.

உண்மையில் இராணுவத்துக்கும் கடற்படைக்கும் வான்படைக்கும் இங்கு வேலையில்லை.பாதுகாப்பைப்பொலிஸ் படையினர் செய்யலாம். வான் படையினர் வானூர் திச் சேவைகளைத் தாம் நடத் துவதற்குப் பதிலாக தனியார் களுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு அவர்கள் தமது தலைமையக முகாம்களுக்குச் சென்று விடலாம். இராணுவத்தினர் காணிகளை விட்டுச்சென்றால், வீடுகளை விட்டுச் சென்றால், வர்த்தகங் களை எம்மவருக்கு வழிவிட்டுச் சென்றால், கடற்கரைகளை கடிந்து அவர்கள் விட்டுச்சென்றால் வேலையில்லாஎம் இளைஞர்களுக்குக் கூட வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.

தமது சொந்தக் காணிகளில் பயிரிட முடியாதவர்கள் கூட எம்மைத் தேடி வேலை வாய்ப்புக் காக வருகின்றார்கள்.

ஆகவே, இந்தத் தினத்தை நாம் கட்சி, மத, வர்க்க, பிராந்தியபேதங்கள் இன்றி ஒருமித்து நினைவேந்துவோம்!

### ஒருமித்த குரல்

எங்கள் ஒருமித்த குரல் ஒலிக்க வேண்டிய கட்டாயம் உண்டு என்பதை மறவாதிருப்போமாக! வடமாகாணசபையாகிய எமக்கு அதிகாரங்கள் போதிய அளவு இருக்கின்றனவோ இல்லையோ வடமாகாண மக்களின் வாக்குகளின் பிரதிபலிப்பே நாங்கள். ஜனநாயக ரீதியாக எமது மக்கள் யாவரையும் ஒன்றிணைக்கும் ஓர் அமைப்பே வடமாகாண சபை. அதன்தலைமகன்என்ற முறையிலேயே நான் இந்த நினைவேந்தலில் கலந்து கொண்டுள்ளேன்.

கட்சிகளுக்கு அப்பாற்பட்டு மக்களின் ஏகோபித்த குரலாக, கரமாக, அதிகாரமாக நான் செயற்பட்டே இந்தச் சுடரை ஏற்றியுள்ளேன். இதே போன்று இந்த நிகழ்வு தொடர்ந்தும் எம் மக்களின் துயரத்தையும் சோகத்தையும், அதே நேரம் – எமது ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் பிரதிபலிக்கும் நாளாக வருடாவருடம் மிளிர வேண்டும்என்றுகேட்டுக்கொள்கின்றேன். இன்றைய தினத்தில் 2009ஆம் ஆண்டு அநியாயமாக மரணத்தைத் தழுவ வேண்டி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டஎமது உறவுகள் அத்தனை பேரினதும் ஆத்மாக்கள் சாந்தியடையவேண்டுமென்றுபிரார்த்திப்போமாக! அவர்க ளின் உற்றார், உறவினர் களுக்கு எமது உளமார்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம். உங் களின் மனச்சுமைகளை நாம் சுக்கமுடியாத விடத்தும் எமது பிரார்த்தனைகளும் அனுதாபங்களும் உங்கள் சோகப்பட்ட உள்ளங்களை ஓர் அளவிற்கு நெகிழவைக்கும் என்றுஎதிர்பார்த்துசோகத்துடன் உங்களிடம் இருந்து விடை பெறுகின்றேன். – என்றார். (உ)

## சமாதானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்துவதற்காகவும் மரியாதை செலுத்துவதற்காகவும் இந்த இடத்திற்கு நாம் அனைவரும் வருகை தந்து கூடியிருக்கின்றோம்.

இந்த யுத்தம் ஏன் நடைபெற்றது. முப்பது வருட காலமாக யுத்தம் ஏன் நீடித்தது? அந்த யுத்தத்தின் உண்மையான குறிக்கோள் என்ன? அந்தக்குறிக்கோளைநாங்கள் அடைந்திருக்கின்றோமா?

இனிமேல் காலத்தில் இந்த நாட்டில் ஒரு யுத்தம் ஏற்படாத வகையில் நிலைமைகள் தற்போது மாறியிருக்கின்றனவா? மாற்றமடையவேண்டிய தேவை இருக்கின்றதா? மாற்றம் அடையவேண்டிய தேவை இருந்தால் அந்த மாற்றம் அடைவதற்கு என்ன நடைபெற வேண்டும்?

இவ்விதமான பிரச்சினைகளுக்குஇன்றைக்குநடைபெறும் நிகழ்வு பதிலளிக்க வேண்டும்.

அதனடிப்படையில் பார்க்கையில் முதலில் உண்மை கண்டறியப்பட வேண்டும். உண்மையின் அடிப்படையில் நீதி வழங்கப்படவேண்டும். நீதியின் அடிப்படை அங்கமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம்வழங்கப்படவேண்டும்.

உண்மை, நீதி, பரிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு நிரந்தரமான சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். இது அவசியமான தேவையாகும்.

சில, பல காரணங்களின் நிமித்தம் இந்த நாட்டில் யுத்தம் ஏற்பட்டிருந்தால் – அவ்விதமான யுத்தம் மீண்டும் ஏற்படாதிருக்க வேண்டுமாகவிருந்தால் – என்ன செய்ய வேண்டும் என்பதைபரிசீலிக்கவேண்டும்.

இந்த நாட்டின் ஆட்சி முறைமையில்பாரிய, ஆழமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமாகவிருந்தால்அவை செய்யப்பட வேண்டும். அதனடிப் படையில் தான் இந்த நாட்டில் நியாயமான, நிரந்தரமான, சமத்துவமான சமாதானம் ஏற்படக் கூடிய வழி பிறக்கும் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி இவ்விதமான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்த நிகழ்வு முள்ளிவாய்க்காலில் நடைபெறுகின்றபோது இந்த நிகழ்வில் இந்த நாட்டில் உள்ள மக்கள் மாத்திரம் அல்ல பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதகுருமார்கள் ஆகியோரும் பங்கேற்றிருக்கின்றார்கள். இந்த நிகழ்வை சர்வதேச சமூகமும் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

என்னுடய உரையைப்பற்றி இங்கு யாராவது பேசுவதாக இருந்தால் அந்த உரையை முழுமையாகவாசித்தபின்னரே பேசவேண்டும். என்ன விடயத்தை பேசினேன், என்ன விடயத்தை நான் பேசவில்லை என்பது எனக்கு நன்கு தெரியும். ஆகவே அந்த விடயத்தை நான்தொடர விரும்பவில்லை.

எனது உரையின் ஆரம்பத்திலே உண்மைகள் அறியப்பட வேண்டுமென்று நான் கூறியிருந்தேன். உண்மைகள் அறிப்படுவதாக இருந்தால், யுத்தத்தின்போது நடைபெற்ற சம்பவங்கள் வெளிவரவேண்டும். உண்மை வெளிவரவேண்டும். யுத்தம் சாட்சியங்கள் இல்லாது நடத்தப்பட்டுள்ளது.

யுத்தம் தீவிரமடைவதற்கு முன்னபதாக 2008 ஆம் ஆண்டு இந்தப்பகுதியில் கடமையாற்றிக்கொண்டிருந்த சர்வதேசநிறுவனங்களின் அதிகாரிகள், ஐ.நாவின் அதிகாரிகள், சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகள், உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் என எல்லோருக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இறுதி யுத்தத்தின் போது இந்த பிரதேசத்தில் 60ஆயிரம் மக்களேவாழ்ந்துவந்துள்ளனர் எனக் கூறியுள்ளார்கள். உண்மையிலேயே இந்தப் பிரதேசத்தில் 4இலட்சம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். அதன் காரணத்தால் மக்களின் இழப்புக்கள் இந்தளவிற்கு உயர்வாக காணப்படுகின்றன.

ஆகவேதான் உண்மைகள் கண்டறியப்படவேண்டும் என நான் வலியுறுத்துகின்றேன். எமது மக்களுக்காக நாம் அனைவரும் கூடி எமது மரியாதையையும் நினைவேந்தலும் ஒன்றாச்செய்கின்றோம். – என்றார்.

## நுணாவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயத்தில் சாவகச்சேரியில் இருந்துயாழ்நோக்கிபயணித்த மகேந்திரா வாகனம் நிலை தடுமாறி முன்னால் வெளிநாட்டு பயணிகளை ஏற்றிச் சென்ற காரை மோத, கார் அதன் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மோதியுள்ளது.

இதில் மகேந்திரா வாகனம் மற்றும் கார் ஆகியவை கடுமையாகச் சேதமடைந்துள்ளன. மகேந்திரா வாகனத்தில் பயணித்த நாகராசா தினேஷ் (வயது 27), சக்திவேல் அமில் ராஜ் (வயது 20) ஆகிய இருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுவருகிறார்கள்.

வாகனங்கள் ஐந்தும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில்தடுத்துவைக்கப்பட்டுள்ளன. மேலதிகவிசாரணைகளைசாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (உ–21)

# விபத்து ஏற்படக் காரணம் ரயில்வே திணைக்களம்!

## பொறுப்பற்றவகையில் செயற்படுகிறது என்கிறார் அமைச்சர் சத்தியலிங்கம்

வவுனியா, மே 19


இலங்கைரயில்வேதிணைக் களத்தின் பொறுப்பற்ற நடவடிக்கைகளே அண்மைக்காலமாக ரயில் விபத்துக்கள் இடம்பெறுவதற்குக் காரணம் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ரயில்வே திணைக்களம் பொறுப்பற்ற விதத்தில் தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்குச் சிறந்த உதாரணம் ஓமந்தை விளாத்திக்குளம் ரயில்வே கடவையை மூடியமை. ஓமந்தை நகரிலிருந்த பெரியவிளாத்திக்குளம் செல்லும் வீதி மிகவும் பழைமையானது. இலங்கையில் ரயில் சேவை ஆரம்பிப்பதற்கு முன்பே மக்களால் பயன்படுத்தப்பட்ட வீதியாகும். எனினும், 2012 ஆம் ஆண்டு ரயில் பாதை விஸ்தரிப்பின் போது பொதுமக்களுடன் கலந்துரையாடாமல் தன்னிச்சையாக வீதிக்கு குறுக்காக ரயில் நிலைய மேடையை அமைத்து அந்தப் பாதையை மூடியுள்ளனர்.

இதற்குப் பதிலாக மாற்றுப் பாதையொன்று திறக்கப்பட்டுள்ளது. 50 மீற்றர் தூரம் கடவையை கடக்கவேண்டிய மக்கள் தற்போது இரண்டு கிலோ மீற்ற தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதற்கு அப்போதைய மாவட்ட நிர்வாகமும் பொறுப்புக் கூற வேண்டும்.

இதனால், அன்றாடம் பாடசாலை செல்லும் மாணவர்கள், நோயாளிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர். சிலவேளைகளில் பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பற்ற விதத்தில் ரயில் வீதியைக் கடக்க முற்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 2014 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டாலும் ரயில்வே



திணைக்களம் செவிசாய்ப்பதாக இல்லை. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணங்களைக் கூறித் தட்டிக்கழிக்கின்றார்கள். இது தொடர்பில் 2015 ஆம் ஆண்டு கிளிநொச்சிக்கு வருகை தந்த ரயில் அமைச்சரிடம் தெரிவித்திருந்தேன். அதேபோன்று இந்த வருட ஆரம்பத்தில் வவுனியா பேருந்து நிலைய திறப்புவிழாவுக்கு வருகை தந்த ரயில்வே துறை அமைச்சரிடம் நினைவூட்டல் கடிதம் வழங்கியிருந்தேன். எனினும் எதுவுமே நடைபெறவில்லை.

இதே போன்றுதான் வவுனியாவில் காணப்படும் பல கடவைகள் முறையாக நிர்மாணிக்கப்படவில்லை. தண்டவாளம் தரைமட்டத்துக்கு மேலாக வெளிக்கிளம்பிய நிலையில் காணப்படுகின்றது. இதனால் பாதையை கடக்கும் வாகனங்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றன. குறிப்பாக பெண்கள் மோட்டார் சைக்கிள்களில் வீதியை கடக்கும்போது வாகனம் இயங்காது நின்று விடுகின்றது.

புதூர் புளியங்குளம் வீதி கடவை பாதுகாப்பற்றதாக காணப்படுகின்றது. இங்கு பாதுகாப்புக் கடமையில் கடவைக்காப்பாளர் இல்லை. மின்சமிக்ஞை விளக்கு மட்டுமே காணப்படுகின்றது. கடந்த சில தினங்களாக இந்த சமிக்ஞை இயங்கவில்லை என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் ஊர்மக்களும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயங்களில் ரயில்வே திணைக்களம் கூடிய கவனமெடுத்து எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.-என்று தெரிவித்துள்ளார். (ஐ-100)

## குருநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ. ஆர். வி.) போடப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி,இன்று வெள்ளிக்கிழமை :

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை குருநகர் சனசமூக நிலையம் முன்பாக.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை கடற்கரை வீதி 4 ஆம், குறுக்குத் தெரு சந்தி.

★ பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை - பாங்சால் வீதி 3 ஆம் குறுக்குத் தெரு சந்தி.

## ஆலோசனைக் கூட்டம்

அச்சுவேலி,மே 19

கோப்பாய்கல்விக்கோட்டத்தில் சிறுவர்களுக்கான கட்டாயக் கல்வி தொடர்பான ஆலோசனைக்கூட்டம்இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி என்.சிவநேசன் தலைமையில் இடம்பெறும்.

இந்தக்கூட்டத்தில் சிறுவர் உரிமை மற்றும் சிறுவர்களுக்கான கட்டாயக் கல்வி தொடர்பாக, உயர் அதிகாரிகள் கருத்துரை வழங்குவார்.

## நாளை மின் தடை

நாளை சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதி கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர்வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ராஸ்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை.

நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, மூள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலைகிழக்கு, Cey-Nor பவுண்டேஷன் லிமிற்ரெட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி,

நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), நெடுந்தீவு தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, பனைவள ஆராச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன் பிட்டியிலிருந்து வங்காலை வரை வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## முன்னாள் எம்.பியை அழைத்தமைக்கு பாடசாலையிடம் விளக்கம் கோரல்!

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அழைத்தமை தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக அதிபரிடம் வடக்கு மாகாண கல்வி அமைச்சு விளக்கம் கோரியுள்ளது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் தொழிநுட்ப பீட திறப்பு விழாவுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த விழாவுக்கு வடக்கு மாகாண சபை மக்கள் பிரதிநிதிகள் எவரும் அழைக்கப்படவில்லை.

எனவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பிரதம விருந்தினராக அழைத்ததன் பின்னணி மற்றும் வடக்கு மாகாண சபை மக்கள் பிரதிநிதிகள் எவரையும் அழைக்காமை என்பவற்றுக்கான விளக்கத்தை பாடசாலை அதிபர் ஊடாக பெற்று அறிக்கையை அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளரால் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் விக்கினராஜா கருத்துத் தெரிவிக்கையில்-

பாடசாலைக்குத் தொழிநுட்ப பீடம் வருவதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரே காரணமாக இருந்தார். அவரின் முயற்சியினாலேயே பாடசாலைக்கு தொழிநுட்ப பீடம் கிடைத்தது.

அத்தோடு நாங்கள் தொழிநுட்ப பீடத் திறப்பு விழா செய்யவில்லை. சம்பிரதாயபூர்வ சமய நடவடிக்கைகளையே மேற்கொண்டோம். எனவே அதில் பாடசாலை சமூகத்தின் விருப்பின் பேரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை அழைத்திருந்தோம் - எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர் ஒன்றுகூடல்

ஆஸ்திரேலியாவில் கடந்த 29 வருடங்களுக்கும் மேலாக இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களிடையே ஒன்று கூடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை வரையில் யாழ். மாவட்ட செயலகத்தில், இந்த நிதியத்தின் உதவியுடன் கல்வியைத் தொடரும் யாழ். மாவட்ட மாணவர்களுக்கான ஒன்றுகூடல் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் என். வேதநாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

மங்கல விளக்கேற்றலுடன் நீத்த போரில் உயிரிழந்த மக்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு நிகழ்ச்சிகள் தொடக்கி வைக்கப்படும்.

யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலைய பரிபாலன சபை உறுப்பினர் த. ஜெயந்தன் வரவேற்புரையும், நிறைவேற்றுப்பணிப்பாளர் செ. யோகநாதன் தகவல் அமர்வு உரையும் நிகழ்த்துவர்.

இந்த நிகழ்ச்சிகளுக்காக ஆஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்துள்ள இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் பரிபாலன சபை உறுப்பினர்களான லெ. முருகபூபதி, அப்புத்துரை சதானந்தவேல் ஆகியோரும் உரையாற்றுவர்.

கல்வி நிதியத்தின் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்ட மாணவர்கண்காணிப்பு தொடர்பாடல் நிறுவனமான சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் இந்த மாணவர் ஒன்றுகூடலை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஆதரவுடன் கல்வியை இடைநிறுத்தாமல் தொடரும் வடக்கு, கிழக்கு உட்படப்போர் உக்கிரமடைந்த காலப் பகுதியில் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட மாணவர்களுக்கான ஒன்றுகூடல், தகவல் அமர்வு என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - விசுவமடுவில் - நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை முல்லைத்தீவில், விசுவமடு கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி நிலைய திட்ட அலுவலர் ந. பாஸ்கரன், திட்ட இணைப்பாளர் சி.இன்பரூபயன், முல்லைத்தீவு தொடர்பாளர் திருமதி கு. சுதர்சினி மற்றும் லெ. முருகபூபதி ஆகியோர் உரையாற்றுவர்.

வவுனியாவில் - நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா வேப்பங்குளத்தில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் தொடர்பாடல் அமைப்பான சமூக அபிவிருத்திக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணிமனையில் நடைபெறும்.

வவுனியா நிகழ்ச்சிகளை, வவுனியா சமூக அபிவிருத்திக்கான தொண்டு நிறுவனத்தின் இணைப்பாளர் செல்வி நிரோஷினி ஒழுங்கு செய்துள்ளார்.

கிழக்கு மாகாண மாணவர்களுக்கான தகவல் அமர்வும் ஒன்றுகூடலும் நிதிக்கொடுப்பனவும் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் நடைபெறும்.

இந்தநிகழ்ச்சிகளில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் பரிபாலன சபை உறுப்பினர் இராஜரட்ணம் சிவநாதன் இணைந்துகொள்வார் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)



முள்ளிவாய்க்கால் பேரவலப் பெருந்துயர் நினைவேந்தலில் நேற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் சுடர் ஏற்றி அஞ்சலி செய்கின்றமையையும், தங்கள் உறவுகளை பறிகொடுத்தோர் ஒன்று கூடி ஒருமித்த குரலாய் குழறி அழுகின்றமையும், அங்கு இடம்பெற்ற மேலும் சில பதிவுகளையும் காணலாம்.



ஜனநாயகப் போராளிகள் கட்சியினரும் நேற்று முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தினர். முதலில் இரட்டைப் புளியடி என்ற இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு முள்ளிவாய்க்கால் கிழக்கு பொதுநோக்கு மண்டபத்துக்கு அருகில் சுடரேற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன.



யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. புதிதாகப் பதவியேற்ற பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ரட்ணம் விக்னேஸ்வரனும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் முள்ளிவாய்க்கால் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் நினைவேந்தல் இடம்பெற்றது.

## நுவரெலியாவில் 30 அடி பள்ளத்தில் பாய்ந்த பஸ்; 16 பேர் படுகாயம்!



நுவரெலியா - வெலிமடை பிரதான வீதியில் பயணிகள் பஸ் ஒன்று நேற்று நண்பகல் வீதியின் கட்டுமானப் பகுதியிலிருந்து விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து, சரிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், சாரதி உட்பட 16 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல 10 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள [illegible] 19.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.